உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

# ரோமியோ ஜூலியத்

[ஒரு ஷேக்ஸ்பியர் நாடகக்கதைச் செய்யுள்]

இஃது

ஆனைமலை ஸ்ரீமத்

A. R. ஸ்ரீநிவாச முதலியாரால்

இயற்றப் பெற்று

மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்க கிரந்த அக்கிராசனாதிபதியும்
நச்சினார்க்கினியர் ஞாபகச் சின்ன ஸ்தாபகரும்

மதுரைத் தமிழ்ச்சங்கப் பரீக்ஷாதிகாரிகளுள்ளும் நிர்வாகசபை
யோருள்ளும் ஒருவருமான

தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத்

ம. கோபாலகிருஷ்ணையரவர்களுக்கு

அவர்களது தமிழ்த்தொண்டை வியந்து

தம் குருவாகப் பாவித்து

சமர்ப்பிக்கப் பெற்றது.

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலை.

விலை அணா 8.

*Copy Right Registered.*

1920.

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

# உரிமையுரை.

எந்நாளும் உளதமிழும் ஆங்கிலமும்
வல்லவனென் றெவரும் போற்றும்
மன்னுவான் நீயெனவும் எனதுளத்துக்
குருவெனவும் மனத்தில் எண்ணி
இந்நூலை நினக்குரிமை செய்கின்றேன்;
இதனைமகிழ்ந் தேற்றல் வேண்டும்;
நன்னுவ லோர்புகழ் ம. கோபால
கிருஷ்ணனெனும் நாவ லோனே!

# Preface.

" Shakespeare, " said Ben Jonson, " is of no age, but for all time. " We may say he is of no country, but belongs to the whole world. His genius has been recognised by all the nations of Europe and America and they vie with one another in their appreciation and worship of that master dramatist and poet. His works have been translated into all the languages that could boast of a literature. It is but proper that the Tamil language possessing a rich past, should make Shakespeare its own and any attempt which tends to increase the knowledge of Shakespeare amongst the Tamil speaking public is worthy of praise and encouragement.

The present book is the story of Shakespeare's 'Romeo and Juliet' told in Tamil verse. The dictum that 'Translators are traitors' does not hold good in this case. The author has not lost any of the manifold beauties of the original; but has given them an expression quite as pleasing as in Shakespeare. The translator has taken care to see that the story is perfectly understood by the public in all its aspects.

'Romeo and Juliet' is a story of Italy and it would be difficult for the Indian to grasp fully the sentiments and ideas of the west. The present writer by introducing ideas and sentiments belonging peculiarly to his readers, has made the narrative highly interesting. Thus for instance, the idea that the wife should not live apart from her husband, that she should partake of the joys and sorrows of her husband wherever he might be, is particularly Indian, and the author by making his Juliet, give expression to these sentiments has brought her near to us as Sita and Damayanti. Such an adaptation is not to be considered a fault. Besides the interesting story this book is readable for the language in which it is written. As easy Tamil style varying its quality in accordance with the varying situations, it expresses completely the proper passions, thoughts, ideas and feelings of the various characters. The story moves on easily without any let. It can be asserted without any doubt that the reader is profited on account of the perusal of this book.

It is necessary to say here a few words about the story, a few remarks about the characters of the play. 'Romeo and Juliet' is a tragedy. It arises not on account of the impetuous passion of Romeo and Juliet. The cause lies deeper. It is the hatred between the Capulets and the Montagues that brings about the death of the lovers The enmity of the two houses hangs overshadowing the fate of Romeo and Juliet. By a fatality not to be withstood Romeo is hurried on, even against his disinclination to draw on Tybalt and kill him. The rest follow as inevitable consequences. Over the graves of their daughter and son, the Capulets and the Montagues are reconciled and peace is once more restored in Verona.

The Author of the following pages, is a young man full of enthusiasm for the enriching of Tamil literature, for raising the Tamil language to its former glory and bringing under its domian the brilliant literatures of other countries. Surely he has touched upon a quarry which would pay him amply for his pains and which would make pleasing, his labours. May we piously wish that he would be able in time to come, to give us as pleasing versions of the other plays of Shakespeare as this 'Romeo and Juliet.'

*National College,*
*Trichinopoly.*

S. Krishna Iyer, B. A.

## OPINIONS.

These are times when the market is flooded over one thousand books in the Vernaculars of the Presidency have been published during the 3rd quarter of the year 1919—with books good, bad and indifferent. One cannot in justice say that this the maiden attempt of the author with it promise for the future, comes under the latter categories. Simplicity of style is its outstanding feature. I am of opinion that it is eminently suited as a Text-Book in the Secondary School classes.

*Anamalai*
*13th Feb. 1920.*

A. A. Rangaram M. A.

உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

# முகவுரை.

தெய்விகப் புலவர்கள் யாங்குத் தோன்றினும், அவர்கள் இயற்றியருளிய அரிய நூல்கள் நானிலத்தார் யாவர்க்குமே சொந்தமானவையாகும்: நமது பரதகண்டம், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று போற்றப்படுவதுபோல், இங்கிலாந்தும், "ஷேக்ஸ்பியர் தன்னைச் செகத்தினுக்கே தந்து செய்ய புகழ்கொண்ட மேனாடு" எனப் போற்றத்தக்க தொன்றாம். "மேனாட்டுக் காளிதாஸன்" எனத்தகும் ஷேக்ஸ்பியர் இயற்றிய நாடகநூல்கள், பல பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு, அவற்றுள் அடங்கிய கதை நிகழ்ச்சி மனோபாவ விளக்கம் முதலிய பொருட் பொலிவாலும், சுவை படக்கூறல் விளங்க வைத்தல் முதலிய பெரு நயங்களாலும் கலை வல்லோரால் மிகவும் பாராட்டப்பெற்று வருகின்றன. தமிழ்மக்களும் அம் மகாகவியின் நூல்களைத் தம் தாய்மொழியில் அறிந்து மகிழ்வது அவசியமே யாகும்.

இப்பொழுது வெளியாகியுள்ள இந்நூல், ஷேக்ஸ்பியர் நாடகங்களுள் ஒன்றான "ரோமியோஜூலியத்" என்பதன் தமிழ்மொழிபெயர்ப்பாகும். இது ஆதிகவியின் முறைப்படி நாடக ரூபமாக எழுதப்படாமல் விருத்தப்பாக்களாக எழுதப்பட்டுள்ள போதிலும், முதல்நூலின் சுவை முற்றும் கொண்டு விளங்குகின்றது மிக்க இனிய எளிய நடையில் 376 விருத்தப் பாக்களில் முடிந்த ஒரு நூலாக வெளிவந்துள்ள இதனைத் தமிழ் வாசிக்கத் தெரிந்த எவரும் ஆவலுடன் பெற்று இன்புற்று, ஷேக்ஸ்பியரின் சாதுர்யத்தையும் நூலின் மேன்மையையும் அநுபவித்து ஆநந்தமுறுவர் என்பது திண்ணம்.

இக்காலத்தில் பிறபாஷைகளிலிருந்து,—அதிலும் ராஜபாஷையாகிய ஆங்கிலத்திலிருந்து—நூல்களும் கருத்துக்களும் தமிழிலும் புகுவது இயற்கையே. ஆயினும் அவற்றைத் தமிழிற் புகுத்துவோர், அவற்றைத் தமிழ் மணங்கமழ அமைத்தலே தகுதி உடைத்தாம். இப்புதிய செய்யுள்நூலும் இந்நெறியினையே பற்றிய தென்பது இதனைவாசிப்போர்க்கு நன்கு விளங்கும். இந்நூலாசிரியர் உவமை, தற்குறிப்பேற்றம், நீதிபோதனை ஆதியவற்றைத் தமிழ்மரபுக் கேற்ப, ஏற்றவிடத்து அமைத்துக்கொண்டு, தமிழ்க்காவிய நூல்களின் நடையைப் பெரும்பாலும் தழுவி இதை இயற்றியுள்ளார். காலதேச வர்த்தமானங்கட்கேற்ப, இவர் தம் வழிநூலிற் செய்துள்ள மாறுதல்கள் தமிழ் மக்கட்கும் பண்டிதர்கட்கும் மகிழ்வே விளைப்பனவாகும். உதாரணமாக, மனைவி கணவனை விட்டுப்பிரியாது, அவன் செல்லுமிடமெல்லாம் சென்று, அவனது சுக துக்கங்களை அநுபவித்தல் முதலியன, நம் நாட்டுக் கொள்கையும் வழக்கமுமேயன்றி மேற்குத் திசையாருடையன

வல்லவே. நமது இத்தகைய ஆசார அபிப்பிராயங்களை நம் புலவர் ஜூலியத்தின் மூலமாக வெளிப்படுத்தி, சரித்திரச் சுவையை நன்கனுப விக்கு மாறு செய்தமை பாராட்டத் தக்கதொன்றன்றோ?

காதலன் காதலிகளின் மெய்யன்பு, நீண்டகாலமாக மூண்ட குலப்பகையின் கொடுமை, முதலியன விரித்துக் கூறப்பட்டுள்ள இந் நூலைப் படிப்பவர் எவரும், 'பாரனைத்தும் பொய்யெனவே துறந்த பட்டினத்தடிகள்' ஒருகால் கூறிய

> "என்செய லாவதி யாதொன்றும் இல்லை. இனித் தெய்வமே!
> உன்செய லேயென் றுணரப்பெற் றேன். இந்த வூனெடுத்த
> பின்செய்த தீவினை யாதொன்றும் இல்லை. பிறப்பதற்கு
> முன்செய்த தீவினை யோஇங்ங னேவந்து மூண்டதுவே"!

என்ற திருவாக்கை நினையாதிரார்.

இதனை இயற்றியோர், தமிழில் மிக்க அபிமானமும், ஒழுங்கான தேர்ச்சியும், தெளிவான நடையிற் செம்பாகமாகச் செய்யுள் இயற்றும் வன்மையும் படைத்தவர் என்பதற்கு "விவேகோதயம்" முதலிய தமிழ்ப் பத்திரிகைகட்கு இவர் செய்துவந்துள்ள விஷய தானங்களே போதிய சான்றாகும்.

இவ்வினிய நூல், நீண்டகாலம் மதுரைக்காலேஜில் தமிழ்ப்பண் டிதராகவிலகி, இப்பொழுது திரிசிரபுரம் நேஷனல் காலேஜில் தமிழ்ப் போதகராக மிளிர்பவரும், மதுரைத்தமிழ்ச்சங்கப் பரீக்ஷாதிகாரிகளுள் ளும் நிர்வாகிகளுள்ளும் ஒருவரும், மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங் கத்தின் நிரந்தர அக்கிராசனாதிபதியும், தாம் இயற்றிப் பிரசித்திபெற்ற பல நூல்களாலும் நடத்திய பத்திரிகைகளாலும் பிரசங்கங்களாலும் தற்காலத்தில் தமிழ்க்கலைவிரித்து விளங்கும் ஒண்மதியாளரும்,எமதரிய நண்பருமான பிரம்மஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையர் அவர்களுக்குச் சமர்ப் பிக்கப்பட்டிருப்பதறிந்து அகமிக மகிழ்கின்றேன்.

படிப்போர் மனம் பழுதுறாவண்ணம் எழுதப்பட்டுள்ள இந்நூல் "டெக்ஸ்ட்-புக் கமிட்டி" யாரால் "கலாசாலைகட்கேற்ற பாடபுத்தகங் களுள் ஒன்று" என அங்கீகரிக்கப்படும் என்றும், 'டிரெயினிங்ஸ்கூல்' அதிகாரிகள், 'சர்வகலாசாலை'யார், 'ஸ்கூல்பைனல் போர்டார்', முதலி யோர் இதனை நாலு வகுப்புக்களுக்குப் பாடபுத்தகமாகவிதித்து, ஆக்கி யோர்க்கு ஊக்கம் அளிப்பார்கள் என்றும் விரும்பி எதிர்பார்க்கிறேன்.

இங்ஙனம்,

வே. முத்துஸாமி ஐயர் M.A., L.T.,
பாடசாலைகளின் உப-பரிசோதகர்.

கும்பகோணம்
8-2-20.

உ

# ஆக்கியோன் முன்னுரை.

"தமிழ் மொழியில் எண்ணிறந்த செய்யுள் நூல்கள் இருக்க, இந்நூலுக்கென்னோ அவசியம்? இத்தகைய நூல் இயற்றல், 'நலம் தரா வியர்த்த வேலை;' நகை தரும்; மிகையே ஆகும்" எனச் சில அறிவில் மிக்கார் எண்ணுதல் கூடும். "இக்காலத்தில் வசன நூல்கள் மிகுதியும் தேவை" என்று வற்புறுத்தும் நன்னோக்கத்துடன் அவர்கள் இங்ஙனம் கருதுவாராயின், அவர்கள் நல்லெண்ணம் ஒரு விதத்தில் அங்கீகரிக்கத் தக்கதேயாம். அங்ஙனமின்றிச் "சகல லக்ஷணங்களும் பரிபூரணமாக அமைந்த பண்டைச்செய்யுள் நூல்கள் பல இருப்ப, இப்புன்னூல் எதற்கோ?" என்பார்க்கு, முன்பு என் போன்றான் ஒருவன் ஒட்டக்கூத்தர்க்குக் கூறியதாகச் சொல்லும்

"கோக்கண்டு மன்னர் குரைகடல் புக்கிலர்; கோகநதப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில"

என்ற கட்டுரையை அதி வணக்கத்துடன் நினைப்பூட்டுவேன். அன்றியும் "தானே பின்னிய தாழம்பாயிற் படுப்பவனுக்குள்ள ஆனந்தம், பிறர் தேடி அளித்த தங்கக் கட்டிலில், பட்டு மெத்தையில் படுப்பவனுக் குண்டாகும் ஆனந்தத்தினும் அதிகமே" என்பதை அனுபவசாலிகள் அறியாதிரார் என்றும் அறிவிப்பேன். நிற்க

போதிய தமிழறிவும் நூலாராய்ச்சியும் இல்லேன் எனினும், யான், பாமரர்க்கும் எளிதிற் பொருள்விளங்கும் இனிய தமிழ் நடையில் கவி இயற்றப் பழகும் ஆர்வமீக் கொண்டே இஃதெழுதினேனன்றி என் கல்வித்திறமையை வெளிப்படுத்த விரும்பி இஃதெழுதினேனல்லேன். விருத்தப் பாவில் வெளிவந்துள்ள இச் சிறுநூல் "மேனாட்டுக் காளிதாசன்" எனத் தகும் ஷேக்ஸ்பியர் மகாகவி இயற்றிய "ரோமியோ ஜூலியத்" என்னும் நாடகக் கதையேயாகும். இதனை, யான், என் சிற்றறிவிற்கேற்ப முதனூற் கருத்தையும் வழிநூற் கருத்தையும் தழுவி, வாசிக்கும் யாவரும் ஆதிகவியாகிய ஷேக்ஸ்பியரின் மதி நுட்பத்தையும் சாதுரியத்தையும் ஒருவாறு கண்டு உவக்குமாறு எழுத முயன்றுள்ளேன்.

கேவலம் சிற்றணில்கள், முன்பு ஸ்ரீராமனது திருத்தொண்டு கருதி, சேதுபந்தனம் செய்தமை, அப்பிரானும் அவனது மெய்யடியார்களும் நா நனி வருந்த நலம் பாராட்டியதுபோல், சிறியேன், உள்ளபடியே தமிழார்வம் ஒன்றே கருதி இயற்றியுள்ள இத்தமிழ்நூலைத் தமிழ்த்தெய்வமும் அதற்குத் தொண்டு பூண்டு ஒழுகும் நல்லோரும் ஏற்று, என்னை மேன்மேலும் நலம் பெற ஆசீர்வதித் தருளுமாறு வேண்டுகின்றேன்.

எனது அறியாமை, அஜாக்கிரதை, அயர்ச்சி முதலியன காரணமாக இந்நூலிற் காணப்படும் எவ்வகைப் பிழைகளையும் திருத்திக்கொள்ளுமாறும், இந்நூல் சம்பந்தமாக யான் செய்யவேண்டிய சீர்திருத்தங்களை அறிவித்தருளுமாறும் அறிஞர்களை வேண்டுகின்றேன்.

இனி, தமக்கு அவகாசம் நேர்ந்தபொழுது இப்புத்தகத்தைப் பார்வையிட்டு ஆங்காங்கு சீர்திருத்தம் செய்து தந்த செந்தமிழ் வாணர்க்கும், ஆங்கிலத்திலும் தமிழிலும் முகவுரை எழுதி என்னைப் பெருமை படுத்திய கனவான்களுக்கும், நூலை நன்குபடித்து, சாற்றுக்கவிகள் ஈந்து என்னை ஊக்கிய பண்டிதர்கட்கும் நான் நன்றி கூறுகின்றேன்.

ஆனைமலை
22—2—1920.

இங்ஙனம்,
A. R. ஸ்ரீநிவாஸன்.

# பிழையும் திருத்தமும்.

| பக்கம் | செய்யுள் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 2 | 2 | 2 | மாண்டகன் | மாண்டெகென் |
| 3 | 13 | 2 | தோழன் | தோழர் |
| 10 | 60 | 4 | அரலாரு | அரியாரு |
| ஷை | 61 | 1 | அறியிற் | அறியின் |
| 11 | 68 | 2 | நவின் றுடுவர் | நவின் றிடுவர் |
| 15 | 93 | 1 | வாப்பினில் | வரைப்பினில் |
| 19 | 118 | 1 | இருவரும் | யாமிவண் |
| ஷை | 119 | 4 | தக்த | தக்க |
| 20 | 123 | 1 | யாதும் அறைகுவர் | அறைவர் யாதுமே |
| ஷை | 125 | 1 | அவிர்தரு | அந்தமார் |
| 21 | 132 | 4 | இசைப்பான்:- | உரைப்பான்:- |
| 23 | 148 | 1 | அன்வறண் | அன்றவண் |
| ஷை | 149 | 4 | நிய | நீய |
| ஷை | 150 | 3 | பொருமித | பெருமித |
| 29 | 189 | 3 | மூனிவன் | முனிவன் |
| 30 | 194 | 3 | கொளு | கொளு |
| 32 | 202 | 3 | வேற்றலனுடனே | வேற்றவனுடனே |
| 33 | 206 | 4 | புகல்விவன் | புகல்வேன் |
| 34 | 217 | 1 | சொல்லிய | சொல்லியே, |
| 37 | 233 | 3 | லாளவ | லாதவ |
| ஷை | 237 | 4 | வாய்தனை | வாய்தனைத் |
| 46 | 275 | 3 | வெய்துயிர்த்திட்டனன் | வெய்துயிர்த் திட்டனள் |
| 48 | 291 | 4 | கலைந்தமுதான் | குரைந்தழுதான் |
| 50 | 298 | 1 | மூன்றிளில் | முன்றிளில் |
| 56 | 330 | 2 | அளித்து | ஈந்து |
| 62 | 361 | 4 | என்றுத் | என்று |
| 63 | 366 | 3 | காதவழ்பூந் | தாதவிழ்பூந் |
| 65 | 372 | 1 | மகளை | மகனை |

இப்பிழைகளை மூலத்தில் ஆங்காங்குத் திருத்திக்கொண்டு பின்னர் படித்தல் நலம்.

உ

# சிறப்புப்பாயிரம்.

இஃது, ஆனைமலைத் தமிழ்ப் பண்டிதர்

மகா-௱-௱-ஸ்ரீ சிவசூரியன் பிள்ளையவர்கள் இயற்றியது.

நேரிசை யாசிரியப்பா.

திங்களும் கங்கையுந் தங்குசெஞ் சடையனும்
பங்கயத் தோனும் பதுமநா பனுமே
ஒருபெருங் கடவுளர் எனவொரு சாரார்
புந்தியி னினைந்து புகன்றிடும் வண்ணமும்,
'சீவான் மாவலாற் றெய்வம்வே றிலை'யென
மற்றொரு சாரார் வழுத்திடும் வண்ணமும்
இருவேறு கொள்கைக் கிடனும், தாரணி
மங்கையின் றிலத வதனமாய் விளங்கும்
ஆனை மலைப்பதி யன்புடன் வாழ்வோன்;
வானைநேர் இராம சாமி வரோதயன்
தக்க இளமையிற் றந்தநற் சுதனெனும்
மிக்கோன், எவரும் விரும்பிடுஞ் சற்குணன்
சீநிவா சப்பேர்ச் செந்தமிழ் வாணன்,
ஆங்கிலக் கவியிலும் அரியகத் தியத்திலும்
ஷேக்ஸ்பியர் முதலோர் செப்பிய காதையாம்
இகளறு "ரோமியோ ஜூலியத்" என்னும்
நூலினை, யாமெலா நோக்குமா றாக்கித்
தேனினு மினிய செழுந்தமிழ்க் கவியாற்
செந்நாப் புலமை தெரித்திடும் வகையே
இந்நா ளெழுதா வெழுத்திற்
பன்னாள் நிலையுறப் பதித்துத வினனே.

சு

இது ஸ்ரீமத். ம. கோபாலகிருஷ்ணையர் அவர்கள் மாணாக்கரும்,
மதுரைக் காலேஜ் தமிழ்ப் பண்டிதருமாகிய
ஸ்ரீமத்: நெ. ரா. சுப்பிரமணிய சர்மா அவர்கள் கூறியது.

சேட வரிகர் ஆனைமலை சீநிவா சக்கவிளத்
தோடமுமில் "ரோமியோ ஜூலியத்"தை—நாடி
அருமை விருத்தத்தில் ஆக்கினன்நல் ஆசாற்(கு)
உரிமை அளித்தான் உவந்து.

உ

இவை தமது பெயரை வெளிப்படுத்திக்கொள்ள விரும்பாத
தமிழ்ப் புலமை மிக்க நண்பர் ஒருவர்
இயற்றியவை.

---

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தாரகா கணநடுவிற் சந்திரன்போல்
ஆங்கிலத்தார் தம்மிற் றோன்றிப்
பாரகா வியம்பகரும் ஷேக்ஸ்பியரென்
றொருநாமம் படைத்தோ னாலல்
நீரகா வியமாகச் செப்பியதோர்
ஆங்கிலநூற் செய்யுள் இன்பை
வீரகா வியன் அனைய சார்லஸ்லாம்ப்,
மேரிலாம்ப் விழைந்து முன்னர், (க)

கத்தியமா அம்மொழியிற் புகன்றார். இங்
கதுகொண்டு கடல்சூழ் வைப்பிற்
புத்தமுதம் எனும்படியே "ரோமியோ
ஜூலியத்"தைப் புகழ்மிக் கார்ந்த
முத்தமிழும் ஒருங்கமையத் தமிழ்க்கவிதை
யாத்திவண்நன் முறைமை யாக
எத்தலமும் புகழ்படைத்தோன், பிரசங்கம்
பொழிதிறத்தில் எழிலி போலவான், (உ

தேங்கமழும் பதுமமலர்த் திருத்தொடையல்
புனைதோளான், திகழ்முந் நூலான்,
சங்கெமக்கின் உயிர்போல்வான், மதுரைவளம்
பதியிலுயர் வெய்தி மாண்பார்

ஆங்கிலக்கல் லூரியினிற் றமிழ்த்தலைமை
ஆரியனா அமர்ந்த மேலோன்,
ஓங்குபுகழ்ச் சிராபுரத்து "நேசநல்வித்
யாசாலை" ஒளிருமாறு, (௩)

மன்னுதமிழ்த் தலைமையா சிரியனாகி
மாணவர்க்கு மகிழ்மீக் கூரப்
பன்னுதமிழ்க் கோபால கிருட்டிணப்பே
ரோற்குரிமை பாலித் தானால்;
'இன்னவன்யார்?' எனில், புகல்வன்: ஆனைமலை
யெனும் பதியில், இறைவன்மான
நன்னர்உறை தரும்ராம சாமி யெனும்
பெயர்புனைந்த நல்லோன் செய்த (௪)

புண்ணியமே ஓர்வடிவாய் வந்ததென
அவதரித்த புனிதன்; நாளும்
பண்இயல்நூல் சிறுவருநன் குணரும்வணம்
தெளிவாகப் பகரும் நாவான்;
எண்ணியவா றுயர்தமிழ்க்கும் இன்புறுபா
வலர்க்குநனி ஈவோன்; வானோர்
தண்ணியலைந் தாருவெனப் பல்லுயிர்க்கும்
நலன்உதவு தரும சீலன்; (௫)

மண்டலத்தோர் புகழ்தொண்டை மண்டலவே
ளாளருயர் மரபிற் றோன்றி
எண்டிசையும் இருள்விலக்கும் இனனமானக்
கவிஞர்கலி இருளை ஓட்டும்
திண்டிறலார் வண்மையுறு தினநாதன்;
பலமொழிதேர் செவ்வி வாய்ந்தோன்
வண்டிமிருஞ் செழுங்குவளைத் தார்ச் சீநி
வாசன்எனும் வள்ளியோனே. (௬)

---

## இந்நூலைப் பற்றிய அபிப்பிராயம்.

---

* * * நான் படித்த பாடல் ஒவ்வொன்றும் உரிய சுவைதரும் நலமுடையதாய்க் கருத்தைத் தெளிவாகத் தெரிவித்து மெய்ப்பாடு பயக்கும் தன்மையில் இருக்கின்றது.

அ. கந்தசாமிப்பிள்ளை.
கவர்ன்மெண்ட் காலேஜ் தமிழ்ப் பண்டிதர்,
கோயமுத்தூர்.

இவை சேற்றூர் ஸம்ஸ்தான வித்வானும்
மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவருமான

## ஸ்ரீமத். மு. ரா. அருணாசலக் கவிராயர்

அவர்கள் இயற்றியவை.

---

எங்கிலதென் றுரைக்கவொண்ணா தெப்பொருளும்
எச்சொல்லும் இனிது வாய்ந்த
ஆங்கிலவா ரிதியைஎளி தினிற்கடந்த
ஷேக்ஸ்பியராம் அருங்க வீசன்
தீங்கிலம ராதசுற்றத் தார்பகைத்து
வாழ்தலினால் திகழுமான்மா
ஓங்கிலமாந் தேகாதி யனைத்துமொழிந்
திடுமெனவற் புறுத்திக் கூறும், (௧)
நீதிசெறி "ரோமியோ ஜுலியத்" தென்
நாடகத்தை, நேர்ந்து பெண்டி
ராதியரும் எளிதிலுணர்ந் துய்யும்வணம்
செந்தமிழின் அருமைப் பாவால்
ஓதினான் கேடில்விழுச் செல்வமெனுங்
கல்வியறி வொழுக்கம் வாய்மை
கோதில்கொடை முதலாம்எந் நற்குணமும்
ஒருருவாக் கொண்ட நல்லோன்: (௨)
பொங்குபுகழ் முதலிவே ளாளர்குலக்
கொழுந்தாகப் புக்க மேலோன்,
கொங்குநாட் டினிற்பயிலும் ஆனைமலை
குடியிருப்பாக் குறித்த சீர்த்தி
தங்குமெழில் இராமசா மிக்கோமான்
தவப்புதல்வன், தக்க தன்பேர்
எங்குநில வியசீநி வாசன்எனும்
வள்ளல் பின்னர் இந்நூலை (௩)
பூமதுரை மாணவர்செந் தமிழ்ச்சங்கத்
தலைமையுற்று வாய்மை சான்ற
வாமதுரை யெனச்சிறந்து கேட்பவர்தம்
செவிக்கின்பம் வழங்கு நன்மை
யாமதுரை யேய்புகல் கோ பாலகிருட்
டிணற்குரிமை ஆக்கி னால்
நாமதுரைத் திடமுடியா திவனையவன்
குருவாக நயந்து போலும். (௪)

---

உ

### இது ஆனைமலை இராமாயணப் பிரசங்கியாராகிய
## மகா-ா-ா-ஸ்ரீ வேங்கடராம பாரதியவர்கள் இயற்றியது.
### நிலைமண்டில ஆசிரியப்பா.

---

சீதர னுந்தியிற் றிருவவ தரித்தருள்
போதன் படைத்த புவிக்கொரு திலகமாம்
பரதகண் டத்திற் பண்டிதர் புகழும்
ஆனை மலையெனும் அணிநகர் வாழ்வோன்,
எண்டிசை புகழுந் தொண்டைமண் டலத்து
வேளாண் மரபினன், வேளாண்மை மிக்கோன்,
இருபெருஞ் செல்வமும் பெறுமொரு கனவான்,
மல்லப்ப வேளின் மனமகிழ் பவுத்திரன்,
மன்னவர் மதிக்கும் பொன்னிதி சிறந்த
நல்லவீரப்ப நரேந்திரன் தவுத்திரன்,
சம்பன்ன ராம சாமிமன் தனதுநல்
அன்புக் குரிய அருமைத் தலைமகன்
சீநி வாசன் திகழ்செந் தமிழுடன்
ஆங்கில மென்னும் அரச பாஷையும்
பாங்குடன் கற்ற பருணிதன், தென்றமிழ்க்
கவிபுகல் நிபுணன், கற்றவர் கற்பகம்,
என்னொடு பயின்ற இணையிலாத் தோழனும்
சிவசூ ரியப்பெயர்த் தேசிகன் மாணவன்,
தோமில் "ரோமியோ சூலியத்" என்னும்
ஆங்கிலக் காதையை யீங்குநா முணர்வான்
சொன்னயம் பொருள்நயந் தன்னமுங் குன்று(து)
அமிழ்தினும் இனிய தமிழினிற் றந்தனன்.
வாழ்க வாழ்கஇவ் வண்புக ழோனே.

---

உ

### இது கோயமுத்தூர் மகா-ா-ா-ஸ்ரீ
## C K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் B. A. கூறியது.
### வெண்பா

சொல்லரிய "ரோமியோ சூலியத்து" நாடகத்தை
நல்லதமிழ்ப் பாவில் நவின்றானல்—தொல்லறிவார்
சீநிவா சப்பெயர்கொள் சீரியனிங் கெல்லோரும்
சீனியெனப் பேசச் சிறந்து.

---

## இலை திரிசிரபுரம்

நாஷனல் காலேஜ் உயர்தர வித்யாசாலைத் தமிழ்ப் பண்டிதராகிய

## ஸ்ரீமத். தி. பொ. பழனியப்பப் பிள்ளையவர்கள்

இயற்றியவை.

---

இரும்பா மனத்துப் பகைவோர்கள்
எய்துந் துன்பு நனிவிளக்கிக்
கரும்பா மொழியும் ஷேக்ஸ்பியரின்
கதை“ரோமியோஜூலியத்”தையுற
அரும்பாப் புலமை யாளர்க்கும்
அரும்ப இன்பம் தமிழ்மொழியில்
தரும்பா வலவன் யாவன் எனில்
சாற்றுங் கொங்குக் குடநாட்டின், (௧)

விழையும் செழுந்தேன் விழுத்தொடைகள்
விளங்கிச் சாரல் வாய்வழியக்
குழையும் பிடிக்கு நன்றூர்த்தக்
கூர்த்த களிறு புழைக்கரத்தை
நுழையும் படிக்குப் புகவிட்டு
நொறில்தூம் பாகப் பெருகவிடும்
தழையும் வளத்தின் ஆனைமலை
தனில்வாழ் சீநி வாசனரோ, (௨)

முனிக்குந் தேற அரிதாகி
மும்மை யுலகும் புகழ்ந்திடுமுக்
கனிக்கு மதுர மின்றாக்கிக்
கதிர்த்த வெள்ளத் தமுதூற்றி
இனிக்குந் தமிழுந் தேர்ந்தாங்கே
இசையாங் கிலமு நன்றாய்ந்த
தனிக்குஞ் சாத்தை அனையாரே
தக்கார் உரிமை கொளற்கென்றே, (௩)

பழக வினித்துப் பயனுற்றும்
பயின்மா ணவர்சேந் தமிழ்ச்சங்கத்
தழுக னமைந்த முழுத்தலைமை
யணி கோபால கிருட்டிணனே
கழக நிறைந்த புகழாளன்
கணித்த சிறப்பை யுடையனென
மழகன் றன்பின் நல்லுரிமை
மாண்பா சங்கின் நீந்தனனே. (௪)

---

உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

# ரோமியா ஜூலியத்.

## விநாயக வணக்கம்.

"உலகினை வலஞ்செய் தோர்க்கே உரியமாம் பழம்ஈ(து)" என்ன
நிலவணி சடையோன் கூற, "நிமலனே! எந்தாய்!! இந்த
அலகிலா உலகம் நின்னுள் அடங்குமால் நின்னை யேயான்
வலமதா வந்தேன்" என்றோன் மலரடி வணக்கம் செய்வாம்.

## நூலின் பெயர்.

கருத லாரெனும் மாண்டேகு காபுலத் தாகும்
இருவர் பாலிடை எய்திய இகல்பொருட் டாகத்
தரும ரோமியோ ஜூலியத் தெனும்பெயர் தாங்கி
வருவ தாகுமிந் நூலென வழுத்துவர் மேலோர்.

## நூலின் வரலாறு.

திருவாரும் ஆங்கிலத்திற் செய்யுளாக
ஷேக்ஸ்பியரென் றுரைத்திடுமோர் சீர்த்தியாளன்
விரிவாகத் தந்தகதை ஆகும் ஈது.
மேரீலாம்ப், சார்லஸ்லாம்ப் என்போர் மேலுள்
அரிதாய கத்தியமா ஆங்கி லத்தின்
அமைத்திட்டார்; மற்றதனை ஆராய்ந் தேயான்
ஒருவாறு தமிழ்ப்பாவின் உரைக்க லுற்றேன்.
உள்ளபிழை பொறுத்தல்கடன் உரவோர் கட்கே.

# நூல்.

1 ஆங்கிலர் முதலா னோர்வாழ் அணிதிகழ் ஐரோப் பாவில்
தேங்கமழ் சோலை சூழ்ந்து திகழும்இத் தாலி யாவென்(று)
ஓங்கிய தேய மொன் றுண்(டு): ஒளிருமற் றத்தே யத்தின்
பாங்கர் வெரோனா என்னும் பண்புறு நகர்ஒன் றுண்டால்.

2 இன்னநன் னகரந்தன்னில் இருந்தனர் வெகுநாள் முன்னர்
மன்னுகா புலத்தென் போரும், மாண்டேகன் போரு மான
உன்னத வமிசத் தார்கள், ஒருவர்பால் ஒருவர் இன்னோர்
பன்னெடுங் காலம் மிக்க பகையுள மனத்த ரானார்.

3 இப்பகை நாளும் நாளும் ஏறியே தோன்றிக் காண
அப்பகை வோர்கள் தங்கள் அயலுள சுற்றத் தோடும்
ஒப்பமை வேலைக் கார ரோடுமற் றோர்க ளோடும்
மெய்ப்பகை கொள்ள லானார் வியப்பினும் வியப்பீ தன்றோ?

4 இந்தவா றிவர்கள் தங்கள் இகல்மிகு பகைவர் தம்மைச்
சந்திசெய் இடங்க ளெல்லாம் சாற்றுவர் கடுஞ்சொல்; மற்றும்
சிந்துவர் உதிரம்; வெய்ய செருவிளைத் தந்தோ! என்றும்
அந்தமா நகர வீதி அடுகள மாகி நிற்கும்.

5 விருத்தனாங் காபு லத்தோர் விருந்துசெய் திட்டான் ஓர்நாள் [ர்
அருத்தியோ டணங்க னாரும் அவண்வர அழைத்தான். அன்னோ
திருத்திய உடைய ராகிச் சேர்ந்தனர். மாண்டெ(கு) உற்றோர்
ஒருத்தரும் வந்தி லாரவ் வுயர்விருந் ததனுக் கந்நாள்.

6 இவ்விருந் தின்சீர் எம்மால் இற்றென இசைக்கப் போமோ?
அவ்விருந் தினர்க ளோடும் ஆங்கடைந் திட்டாள் அந்நாள்
தெவ்வமாண் டெகுவின் செல்வச் சிறுவனும் ரோமியோவின்
எவ்வமில் காதற் கன்னி எழில்மிகு ரோஸ லீனும்

7 இன்னவ ளிடத்துக் காதல் எய்ந்தமாண் டெகுவின் சேய்அக்
கன்னியை நினைந்து நாளுங் கன்றின மனத்த னாகித்
தன்னருஞ் சுற்றம் நீங்கித் தனியனா யிருந்து சற்றும்
துன்னிருள் தனிலும் தன்கண் துயில்கொளா திருப்பன் மாதோ

8 ஈதவன் தன்மை யாக இன்னவன் விருப்பிற் காய
மாதராள் மதனன் அன்ன மற்றவன் தன்பால் என்றும்
ஆதர வில்லாள்; பின்னும் அவமரி யாதை உள்ளாள்;
காதலோர் சிறிது மில்லாள்; கருவமிக் குடையாள் அன்னாள்.

9 இத்தகை யாக இன்னோர் இருவரும் இதயத் துள்ளே
ஒத்தபே ரன்பி லாராய் உற்றுழி, ரோமி யோபால்
வைத்தநல் உழுவலன்பு வாய்ந்தபென் வோலி யாதான்
நத்திய நண்பன் தன்னை நல்வழிப் படுத்த வந்தான்.

10 வந்தவன் ரோமி யோவின் மனத்துள கவலை தன்னைச்
சிந்திட உளத்தில் எண்ணிச் செப்புவன்: "நண்ப! கேட்டி
உந்தையார்க்(கு) எதிரி இந்நாள் உஞற்றிடும் விருந்தில் நீஉன்
சொந்தஇவ் உருவை மாற்றித் தோன்றுவை. தோன்று வாயேல்,

11 பெருமைசால் விருந்துக்காகப் பெட்புடன் ஆங்கே இன்று
வருமெழில் மடவார்க் குள்உன் மனமதைக் கவர்ந்து நிற்கும்
'அருமையும் அழகும் வாய்ந்த அனம் அனாள்' எனநீ சொல்
கருநிறக் காக்கை யாதல் காண்குவை மெய்ய(து)என்றான் [பெண்

12 இவ்விதம் தனது தோழன் இசைத்தசொல் ஏதும் கொள்ளான்.
எவ்விதம் கொள்வன் காதல் எய்ந்தவன்?. எனினும், "ஈது
நவ்வியேய் விழிநம் காதல் நங்கையை மீண்டும் காணச்
செவ்விய வழிய தால்யாம் செல்வம்" என் றெண்ணி னானே.

13 இன்னணம் எண்ணி எண்ணி 'இது சரி' எனத்தீர் மானித்(து)
அன்னவன் தனது தோழன் ஆய'பென்வோலி யோ'வைப்
பன்னு'மெற் கோடி யோ'வைப் பரிவுடன் அழைத்துச் சென்றே
ஒன்னலன் வீட்டு வாயில் உற்றனன் காதல் உந்த.

14 தன்முனம் வந்த மைந்தர் தம்மைஅவ் அதிதி நோக்கி
அன்புடன் 'வருக' என்ன அவர்களை உபச ரித்துத்
தன்பெருந் தகைமை காட்டித் தகுவன அவர்க்குச் செய்து,
மன்பெரும் அன்பி னோடும் மகிழ்ந்திவை மொழிந்திட் டானே:

வேறு:

15 "ஈங்கி ருக்குமிவ் ஏந்திழை மாதரார்
தாங்க ருந்தொழில் தாம்செய்து காய்த்திலாப்
பூங்கையார்; இவர் பொற்கரம் கோத்துநீர்
ஓங்கு நன்மகிழ் வோடு நடிமினே.

16 இன்னும் கேட்குதிர்: என்றன் இளமையில்
அன்னம் அன்ன அரிவையர் தம்முடன்
நன்னர் ஆடிஅந் நங்கையர் தம்செவி
துன்ன இன்மொழி சொற்றுமுள் ளனரோ

17 ஆத லால்இவ் அரிவையர் தம்முடன்
காதல் கூருங் களிநடம் செய்திடப்
போதிர்'' என்னப் புகன்றனன்; பொன்நிகர்
மாத ரோடு நடித்தனர் மைந்தரே.

18 இந்த நன்மொழி யிற்கிசை ரோமியோ
வந்த மங்கையர் தம்முள் வயங்கிய
நந்த வில்அழ காளொரு நங்கையிற்
சிந்தை கொண்டிது செப்பின னேயரோ.

19 "இவள்பொன் மேனியின் ஈடில் அழகிவண்
தவழ்த லால்இத் தனிமனைச் சோதிகள்
உவமையில் ஒளி உற்றன'' என்றுபின்
அவடன் மேனி அமைவுற நோக்கியே,

20 "நீல மாமலை மேலதில் நின்றதோர்
கோல மாமதி போல்வள்இக் கோதையே.
ஞால மாதிவள் அல்லள்;இந் நங்கையை
ஏல வேகொளும் புண்ணியன் யாவனே!

21 தெரிவை யாரிடைச் சீரெழில் வாய்ந்த இவ்
அரிவை நிற்கும் அழகினை நோக்குழி
கரிய புன்னிறக் காக்கைக ளுக்கிடை
ஒருஅனப் பெடை உற்றது போன்றதே.''

## வேறு:

22 என்னவே வியந்து கூறும் யாவையும் உற்றுக் கேட்டான்
ஒன்னலன் காபு லத்தின் உறவினன், மிக்க மூர்க்கம்
மன்னிய டைபால்த் என்னும் வஞ்சகக் கொடுமை யாளன்
துன்னுவெங் கதத்த னாகித் துள்ளினன் சொல்ல லுற்றான்:

23 "நம்மவர் பகைஞன் இன்னோன். 'நமை இவர் அறியார்' என்ன
அம்ம! தன் உருவை மாற்றி அடைந்திவை மொழிந்தான். ஆ! ஆ!!
செம்மைசேர் விழவில் ஈது செய்தனன் துணிவு நன்று! [ன்
இம்மெனும் பொழுதில் இன்னோன் இன்னுயிர் உண்பல்" என்றா

24 என்றனன் எழுத லோடும் இசைமிகு காபு லத்தங்(கு) ·
அன்றவண் அடைந்தார் தங்கள் அணிமுகம் பார்த்தும், மற்றும்
நின்றவன் பெருமை கண்டும் நிகழ்த்திடும் குணங்கள் கேட்டும்
சென்றவன் சீற்றம் தன்னைத் தீர்த்தனன்; தீர்த்த பின்னும்,

25 ஆற்றில னாகிப் பின்னும் அறைகுவன் தனக்குள்: "ஆ! இம்
மாற்றலன், மடமைமிக்க மாண்டெகு மைந்தன், இன்று
வேற்றுருக் கொண்டிங் குற்றான், வெட்கமில் லாது. மற்றும்
சாற்றவொண் ணாத சொற்றும் தப்பிய தென்னே! என்னே!

26 நல்லதா கட்டும் இந்த நாணமில் பையல் தன்னை
எல்லையில் துன்பம் எய்த இபற்றுவன் தண்டம்" என்னாச்
சொல்லினன் கறுவி நெஞ்சம் துடிதுடித் திடஉட் சென்றான்.
கொல்லுலை வேற்கண் நல்லார் கூத்தெலாம் முடிந்த தன்றே.

## வேறு:

27 ஆட்டம் முற்றிய தாயினும் ரோமியோ
போட்ட வேடத்தைப் போக்கிலன்; தன்மனம்
வேட்ட மங்கை யிடத்தினில் மேவி, உள்
நாட்டம் கூறு நயப்பினன் ஆயினன்:

28 "கன்னி தன்னைக் கடிதினில் மேவியான்
என்நி னைப்பை இயம்பிடில் அங்குளோர்
என்நி னைத்திடு வார்கள்?"; என் றெண்ணினன்.
அந்நி னைப்பும் அகற்றினன்; ஏனெனில்;

29 'எண்ணி மாறுரு யாம்கொண்டு ளேம்.அதால்
அண்ணி யோர்தவ றாஎண்ணி லா'ரெனா
பெண்ணில் நல்லவள் தன்கைப் பிடித்(து)"இவை
புண்ணி யத்தலம் போன்றுள வாதலால்,

30 பார்க்க வந்தனன் பாவியேன் நின்கரம்
சேர்த்து யான்தொடில் தீதிலை; தீதெனில்
தீர்க்க முத்தியொன் றாலதைத் தீர்க்குவன்.
போர்க்கண் வேலினைப் போன்ற விழியினாய்!''

31 என் றுரைத்தனன். ஈதுசெ விக்கொளா
நின்ற கன்னியும் மீது நிகழ்த்தினாள்
"ஒன்றும் அன்பும் ஒழுங்குமுள் ளாய் எனா
இன்ற றிந்தேன், இயம்பிய வார்த்தையால்.

32 ஆயின் ஒன்றிங் கறைகுவன் கேள்: இனி
தாயிற் கையின் அலங்கரிப் பாரலால்
வாயின் முத்தம் வழங்குநர் இல்லையே!
நேய! நேர்மையு ளாய்! அறி நீ'' என.

33 "வாயின் முத்தம் வழங்குநர் இல்லையேல்
வாயி னாற்பயன் வாய்ந்ததென்?'' என்றனன்.
"வாயி னாற்பயன் வாய்ந்ததென்?'' என்றியேல்
"வாயி னாற்பயன் வாழ்த்திடல்'' என்றனள்.

34 இன்ன தேநெறி என்றியேல், "வேண்டுவல்
என் அருங்குல தெய்வம்! இன் றென்மனம்
உன்னி உன்னி உழல்கின்ற தொன்றினை.
அன்ன நெஞ்சுழ லாதருள் வா''யென்றான்.

35 ஆய தன்மையில் அன்னவ ளோடும்அந்
நேய மிக்கவன் நின்றுரை போழ்(து)அவள்
தாய் அழைத்தனள் என்றசொற் சார்தலும்
போய் அடைந்தனள் போதுறை வாள்அனாள்.

36 சூலி யத்தவண் சென்றபின், தோமிலா
நூலை யொத்தொளிர் நுண்ணிடை யாளொரு
வேலை யொத்த விழியினள் தந்தை,தன்
கால னொத்த கருதலன் என்பதும்,

37 அருமை சால்தன தையன் இருநிதிக்(கு)
உரியள் என்பதும் ஓர்ந்தனன்; ஓர்ந்ததும்
தரிய லாரினித் தன்னையென் செய்வரோ!
வருப யாவையோ! என்றுளம் மாழ்கினான்

38 மன்னு ரோமியோ மாழ்கினன். ஆயினும்
அன்னள் பாலுறும் அன்பை அகற்றிலன்.
இன்னவன் செயல் இற்றெனச் சொற்றயாம்
கன்னி யின்செயல் யாவும் கழறுவாம்:

39 தாய் அழைத்தனள் என்றலும் சார்ந்தஅந்
நேய மென்கொடி நெஞ்சுறத் தன் உயிர்
நாய கன்என நாடிய மற்றவற்
கேய பேர்முதல் யாவும் உணர்ந்ததும்,

40 "ஆதலன் மகன் ஆகிய இன்னவன்
மீதில் என்மனம் மேவிய தென்னையோ?
ஈது நோக்கிடில் எய்துமோர் துன்பினுக்
கோது முற்குறி யோ!" என்றுணங்கினாள்.

41 கன்னல் ஐந்தொரு பத்தும் கழியவே
அன்ன மாளிகை நின்றும் அகன்றனன்
உன்னு தோழ ருடன்வர ரோமியோ
அன்ன வள்பிரி வாற்றிலன் ஆகியே.

42 உருத்து முற்றுமக் காரிகை பாலவன்
இருத்தி நின்றனன் ஆதலின் ஏகியும்
அருத்தி கூர்தன தன்பார்க ளிற்பிரிந்(து)
ஒருத்த னாஅவன் மீண்டவண் உற்றனன்.

43 உற்ற தும்உளத் தோங்கிய காதலால்
இற்ற நெஞ்சினன் ஈரிரு பக்கமும்
சுற்றி நோக்கினன் கொல்லையைச் சூழ்மதில்
பற்றி ஏறினன் பார்த்தனன் சோலையே.

44 சோலை யுற்றதும் சோதி மிகுந்தநற்
காலை வேளையிற் காண்கதிர் என்னஅக்
காலை வந்து கடிதினிற் றோன்றினள்
சூலியத்தெனச் சொல்லுநம் தோகையே.

45 ஓது மாமரம் ஓங்கிருள் செய்தலின்
தாது லாவிய வண்டலை தண்டலை
மீது லாவிநன் மின்னொளி மேவியே
போத லுற்றிலன் போழிருள் மாமதி.

46 ஈத றிந்தநம் ரோமியோ இன்பமார்
காத லார்ந்தஇக் கன்னியின் பேரொளி
போத லாற்றன் பொலிவிழந் தேமதி
நோத லாயினன் என்று நுவன்றனன்.

47 இன்ன தன்மை இருந்திட ரோமியோ,
அன்னம் என்னும் அவ் ஆயிழை ஆனவள்
தன்னெ ழிற்கரம் தன்னைவைத் திட்டனள்
கன்ன மீதினைக் கண்டனன் காளையே.

48 மாத ராள்கரம் பார்த்து மனத்தில் "ஆ!
தீதி லாஇவள் செங்கைச் சிறுவிரல்
மோதி ரம்என முன்னம் உறுவனேல்
காதல் முத்தமக் கன்னத் திடுவனே."

49 என்று மாழ்கினன். இங்ஙனம் இன்னவன்
நின்ற அந்நிலை நீள்பெரு மூச்செறிந்
தொன்று காதல் உணக்க 'ஐயோ!' எனக்
கன்றிக் கூறினள் காரிகை ஜூலியத்..

50 மாது கூறிய வார்த்தையைக் கேட்டதும்
காதல் கூரக் கழறினன் தன்னுளே:
"ஆதரத்தொளிர் ஆரணங்கே! இவண்
மீதி யாவும் விளம்பி அருள்வையே.

51 கண்முன் நின்ற கதிர்மணி மேடையில்
எண்ணி நின்றனன் இன்னுயிரே! எமர்
நண்ணி இன்புற நாடிடு தெய்வமே!
பெண்ணின் நல்லை நீ பேசுதி" என்றனன்.

52 என்று ரோமியோ இவ்வணம் சொற்றதைத்
துன்று காதல்கொள் ஜூலியத் கேட்டிலள்;
அன்று தன்னுடன் ஆடிய அன்பனிற்
சென்ற சிந்தையள் செய்ததை செப்புவாம்:

வேறு:

53 மாற்றலன்றன் மகன், தனது மகிழ்நன்பேரால்அவற்கூய்,
"ஆற்றகிலேன்! ஆற்றகிலேன்! அந்தோ! யான் ஆற்றகிலேன்!
வேற்றுருவின் அவண்வந்த மேதகையோய்! பகைமையற
மாற்றாயோ நின்பெயரும் மற்றுனது தந்தையதும்?

54 தந்தையதும் நின்பெயரும் தான்மாற்றித் தமியேன்முன்
வந்தையெனில் என்னுடைய வாழ்வுசுக வாழ்வாகும்.
உந்தையதும் உன்பெயரும் ஒழியாயேல் என்னுடைய
சிந்தைபடும் வெந்துயரம் செப்பஎன்றால் ஆகாதே.

55 ஆட்டமெலாம் தீர்ந்ததன்பின் அன்பாயென் கைப்பிடித்துள்
நாட்டமெலாம் சொல்லியஎன் நண்பாவோ! நண்பாவோ!
வாட்டமிக உற்றிடயான் வல்லேனோ வல்லேனோ?
கோட்டமிலாய்! நீ அன்பு கூர்ந்திடுநாள் எந்நாளோ?

56 ஓராத காதலுடன் தியக்கமுறு வேன்முன்னர்
வாராத காரணமென்? வழுத்துதி என் தந்தையவன்
நேராரில் ஒருவன்என நிற்பதனால் என்னையும்நீ
நேராள்என் றெண்ணினையோ? நேய! எனை நேராயோ?

57 'குன்றா அன் புளதுன்பால்' என்றொருக்கால் கூறுவையேல்,
என்றாதை முதலாய யாவரையும் இன்றொழித்தே
உன்றாரம் ஆவேன் ஈ(து) உறுதியென நீ நினைத்தி''
என்றாளவ் வேந்திழையாள்; ஈதுரோ மியோ கேட்டு,

58 ''வேயன்ன தோளுடையாய்! விள்ளு மொழி கேட்டி: எனை
நாயகன்என் றோஅலது நாடியமற் றொன்றாலோ
நீயழைத்தாய் என்றாலும் நேராகும்'' என்றுரைத்தான்.
'நாயகிக்கு நன்றல்ல நன்றலவால் நாயகற்கும்?'

59 ''நள்ளிருளில் இவண் நின்றே நான் வருத்த முற்றிங்கு
விள்ளுமொழி கேட்டிடுவான் மேவினவன் யாரோ?'' என்(று)
உள்ளநடுங் கினள்.நடுங்கி உற்றுக்கேட் டனள்;உடனே
தள்ளரிய காதலனே சார்ந்தவன்என் றவள்அறிந்தாள்.

60 குரலாலே காதலரைக் குறித்துணரக் காதன்மட
வரலாரே யல்லாது மற்றெவர்வல் லார்?அன்பன்
வரலாலே பேருவகை வாய்ந்துகனி வாய்திறந்து
அரலாருங் குழலினள் ''என் அன்ப!'' என அவற்கூவி,

61 ''சுவர் குதித்து வந்தனையே! சுற்றத்தார் தாம்அறியிற்
அவர்கதித்து நின்உயிர்வாங் காரோ''என் றேங்க,அவன்,
''கவல் ஒழித்தி; அவர் நூறு கத்திகள்செய் திடுங்கொடுமை
தவமிகுத்தோய்! நினதுவிழி தருங்கொடுமைக் கீடாமோ?

62 ஒப்புயர்வில் உருவத்தோய்! உயர்குணத்தோய்! என்மீதுன்
மெய்ப் பிரியப் பார்வையுறின், மேவலர்தம் பகைஎன்ஆம்?
இப்பிரியம் இன்றிஉயிர் இருப்பதினும் இன்றேயான்
அப்பகைவர் கைவாளால் அழிவுறுதல் நன்''றென்றான்.

63 சொல்லியஇம் மொழிகேட்ட தோகை,யவன் றனைநோக்கி
''நல்லதுநீ இவ்விடத்தில் நண்ணியதெவ் வா(று)? இங்குச்
செல்லும்வழி காட்டினன்யார்''? செப்பு கென,''மன்மதனே
ஒல்லும்வழி காட்டினன்வே றொருவரும் காட் டினரில்லை.

64 ஒன்றுரைப்பல்: ஆரணங்கே! உத்தமியே! இதுவரையான்
நின்றுகலம் ஓட்டகிலேன் நீள்கடலில். என்றாலும்,
துன்று கடல் கடந்துவெகு துணிவுடனே யான் உன்னைச்
சென்றறியா வெகுதொலையும் சென்று கொணர்வேன்'' என்றான்.

65 தன்நினைப்பைக் காதலர்க்குத் தான் காட்டா தவளிருக்க
உன்னினள் ஆயினும் அதனை உற்றறிந்தான் ஆதலின் அக்
கன்னிமுகம் நாணினள். அக் காலை இது காண இலை:
துன்னிருள் சூழ் அவ்விரவில் தோகை முகம் தோன்றிலதால்.

66 புரையறத்தான் கேடாத பொன்னுக்கு மாற்றும்இலை
உரையுமிலை என உலகோர் ஓதுமொழிக் கேற்பநவ
அரிவையர்கள் தாமேதம் அகம்விரும்பி நாயகனைத்
தெரியின்அவர் தம்பெருமை தேரார்என் றெண்ணுவதால்,

67 தங்களிடம் காதல்மொழி சாற்றவரு வோர்களிடம்
எங்கவர்கள் தாம் இசையின் எள்ளிடுவா ரோஎனவே
பொங்குசினம் உள்ளவரைப் போல் நடிப்பர்; புந்திமிகு
மங்கையர்கள் சாதுரியம் மாநிலத்தில் யார்க்குளதே?

68 தாங்குறித்த காதலரைத் தாமடைவ தென்றாலும்
நாங்கள்உறேம் என்னஅவர் நவின்றிடுவர் அவர்கேட்க;
நீங்கரிய நேயமிகு நேரிழையாள் ஜூலியத்தும்
ஈங்கிவையே செய்திருப்பள் இயலுமேல். என்றாலும்,

69 தனியாகத் தானிருந்து தாங்கிடுதற் கரிதாய
துனியாவும் சொல்லிடவே தோன்றல்ரோமியோ அறிந்தான்.
இனியாதும் பயனில்லை என்றுஜூலியத் உணர்ந்தாள்.
இனியாத வேம்பதுவும் இனித்திடுமால் இச்சையர்க்கே,

70 பற்றலர்தம் குலக்குரிசில் பாலனுருகிப் பற்றுடனே
மற்றவன்றன் பேர்கூவி "மாண்டெகு! நிற் கிசைந்துயான்,
செற்றமிலாய்! எனதற்ப சிந்தையினால் என்றேநீ
சற்றுமெணேல். என்புத்தி சபலத்தி னாலும்இலை.

71 நின்பேரில் எனக்குளமெய்ந் நேயத்தை வெளியிட்ட
தென்பேரிற் பிழையென்ன எண்ணுவையேல் அதுதவறாம்.
அன்பார்நின் றனைமறைத்தென் அகநிலையைத் தோற்றுவித்த
தன்றோஇக் காரிருள்தான்?. அதன் பிழையே என அறிதி.

72 பெண்ணாவார் தமக்குள்ள பேதைமையால் யானுமேதோ
எண்ணாதே செய்தனன்என் றெண்ணாதே. ஆடவர்தம்
கண்ணார வீண்நாணம் காட்டுமட வாரினும்நின்
உண்ணோரும் கற்புமிகு உத்தமியா யான்இருப்பேன்."

வேறு:

73 என்றனள். உரைத்தமாற்றம் இருசெவி களினும் ஏற்று
நின்றவன், "கனவிலேனும் நின்னரும் பெருங் குணத்தை
என்றேனும் ஐயிர்ப்பன் என்ன எண்ணிடேல். அற்பன் அல்லே
என்றுரு மதியும் சாட்சி" எனச் சொல வாய் திறந்தான். [ன்

74 வாய்திறந் திதனைக்கூற வந்தரோ மியோவை நோக்கி,
"நாயக! ஆணை யென்னோ? நானுனை நம்பி டேனோ?
நீயென தன்பனாக நேர்ந்ததென் பேறே யாகும்.
ஆயினும் ஒன்றுநிற்கிங் கறைகுவல்; அதனைக் கேட்டி:

75 இருவரும் இரவில் முன்பின் யோசனை யின்றி யாமிங்(கு)
ஒருவரோ டொருவர்பேச லுற்றதை உன்னுந்தோறும்
தெருமரல் மிகுமால்" என்னச் செப்பலும், "கண்ணே! சற்றும்
வெருவல்; நின்னையல்லால் வேறொருபெண் யான் கொள்ளேன்.

76 எந்திழாய்! நீயும் "உன்னை யின்றிவே றெவனை யேனும்
காந்தனாக் கொள்ளே னென்னக் கழறுதி" என்ன வேண்ட,
"நேர்ந்ததென் ஐயம்? ஐய! நின்னையே மணப்பேன் என்னத்
தேர்ந்துரைத் திலனோ?. மீண்டும் செப்பிடல் பார மாமோ?

77 திரைகடல் அனைய மாவண் சிந்தையேன்; அதன்ஆழத்தின்
வரையில்பே ரன்பு வாய்ந்த மனத்தினேன், உறுதி காட்டும்
உரையுனக் குதவுந் தோறும் உவகையே மிகுத லால்என்
பிரியகா தலன்நீ' என்னப் பேசுவன் மீண்டும்" என்றான்.

78 ஆயது கூறும் வேலை, அன்னாளை வளர்த்துக் காக்கும்
தாயவள் 'கண்ணே, காலந் தாழ்ப்பதென்? விடியற் காலம்
ஆயதால் இனிநீ பள்ளி அமர்தி' என்றுரைக்கக் கேட்டுப்
போயினள் விரைவின் உள்ளே; போயவள் மீண்டும் வந்தாள்.

79 ஆங்கு மீண் டுற்றதும்தன் அன்பனின் முகத்தை நோக்கி
"ஈங்கெனை மணக்கும் எண்ணம் இருக்குமேல்நிற்(கு),எற் குள்ள
ஓங்கருஞ் செல்வமெல்லாம் உன்னடிப் படுத்தி உன்பின்
யாங்கெனும் தொடர்ந்து செல்வேன்; ஈது மெய்" என்று கூறி,

80 "காதல! நீஎன் மீது கருணைகொள் உளத்த னாகி
ஈதுசெய் வாயேல் நீஎன் இன்னுயிர்க் கொழுநன் ஆவை.
நாத! நம் மணநாள் தன்னை நன்கெணித் தூதி மூலம்
கோதறத் தெரிப்பல்" என்னக் கூறினள் உள்ளே சென்றாள்.

81 சென்றவள் தரிக்கி லாளாய்த் திரும்பினள். எனினும், அந்தக்
கன்றிய மனத்தார் பின்னும் கடிமணம் பற்றித் தம்முள்
ஒன்றிய தீர்மா னஞ்செய் துற்றுழிச் செவிலி பின்னும்,
மின்றிகழ் மேனியாளை விளித்ததால் சென்றாள் மீண்டும்

82 ஆயினும், குருவிக் காலில் அமைவுறக் கயிறு கட்டி
மீயதைப் பறக்க விட்டு மீண்டிழுத் தாடும் பெண்கள்
ஏயது பிரிய வொட்டார். ஈதுபோல் ரோமி யோவை
ஆயவள் அனுப்பி டாமல் அடிக்கடி அவன்பால் உற்றாள்.

83 எல்லையில் பறவை யாதி யாவையும் மகிழச் செய்ய
வல்லது கீதம் அல்லால் மற்றெதும் இல்லை என்பர்.
ஒல்லுமக் கீதந் தானும் உளமெய்யன் புற்றோர் தம்முள்
நல்லுரை யாடும் இன்பம் நல்குமோ? நல்கிடாதே.

84 ஆதலால் ஜூலி யத்அங் கடைந்ததில் வியப்பென்? பின்,மெய்க்
காதலன் புள்ளோர் தாங்கள் கழறுவ கழறி, 'ஆ! ஆ!
போதெலாம் கழிந்த தால்இப் போதுசஞ் சலம்நாம் நெஞ்சில்
ஏதுமில் லாது தூங்க இறைஅருள் புரிக' என்ன,

85 இன்னணம் கோரிக்கொண்டே இருவரும் பிரிந்து போனார்.
அன்னதன் பின்பு தன்னார் அணங்கையும், தன்பால் அன்னாள்
சொன்னசொல் யாவும் உன்னி ரோமியோ துயில்கொ ளானாய்த்
தன்மனை உறாது லாரென்ஸ் தனிஎழில் மடத்தைச் சார்ந்தான்.

வேறு:

86 கதிரவன் தோன்றிடுங் காலையின் முன்னம் கடிதெழுந்து
விதிமுறை ஈசனை வேண்டிடுந் தன்மையில் மேவினவன்;
சதிமுதல் யோசனை யாவையும் தன்வயின் சாரலிலான்;
நிதிமுதல் யாவும நித்தியம் என்றெணும் நீர்மையுளான்;

87 ஒன்றுடன் ஒன்றெனும் ஒன்றவில் லாஇவ் உலகினர்க்கு
நன்றிது தீதிதென் றென்றும் உணர்த்தும் நலனுடையான்;
கன்றிய மாண்டேகு காபுலத் என்பர் கடும் பகைமை
சென்றவர் நண்புடன் சேர்தரச் செய்திடும் சிந்தையுளான்;

88 நாரென் றுரைத்திடு நற்குண மேபூண் நலமுடையான்;
ஆரென் செயினும் வெறுத்திட லில்லா அமைவுடையான்;
தாரணி மாதரைத் தாயென எண்ணும் தகவுடையான்;
பாரிலுள் ளோர் புகழ் லாரன்ஸ் எனுமப் பண்ணவனே.

89 மற்றவன் உள்ள மடத்தினுக் கேகிய மைந்தனும்அந்
நற்றவன் தன்னரு கிற்செல அம்முனி "நண்ணி இவன்
உற்றதென் னோஇவண்?" என்ன இறும்பூ துற்றுநின்றான்,
சற்றுமுன் உற்றது சொற்பமும் இற்றெனத் தானறியான்.

90 இளமையில் மோகவி காரங்க ளென்பவை யாவருக்கும்
உளஇ(து)இயற்கையன் றோ? இவன் ரோஸலின் என்பவள்பால்
அளவிலன் புள்ளவன் ஆதலின் நித்திரை யற்றன னென்(று)
உளமதில் எண்ணினன். ரோமியோ அப்போ துரைத்திடுவான்:

வேறு:

91 "துய்ய! என் அன்புறு தோகை யாரெனில்
வெய்ய காபுலத்எனும் விருத்தன் தன்னருந்
தையலே யாகுவள். தந்தை தன்னை நேர்
ஐயனே! ரோஸலின் அல்லள் என்றனன்.

92 என்றவன் கூறிய எல்லை "என்னைகொல்
அன்று தொட்டின்றள வந்த ரோஸலின்
தன்மையும் தன்னுடைத் தன்மை யும்சொலும்
இன்னவன் இவ்வணம் இயம்ப லுற்றது?

93 அறைகடல் வரைப்பினில் ஆட வர்க்கெலாம்
சிறுமியர் மீதினிற் சிந்தை செல்வ(து),அன்
புறுதியினால் இலை.உறு வனப்பினால்.
இறைவ! என் இவர்மதி" என்று கூறினன்.

94 மாமுனி இவ்விதம் வழுத்தி நின்றதும்,
ரோமியோ கூறினன்: "ரோஸலீனை யான்
காமுற, அவள் எனைக் கருதிலா வழி
ஆமதி எனக்குநீ அறைந்த தில்லையோ?

வேறு:

95 மாற்றலனா யாம்கருதும் காபுலெத்தென் போனுக்கு
மகளா வந்த
கோற்றொடி ஜூலியத்தனது மனமார என்னை உயிர்க்
கொழுநனாக
ஏற்றனளால், அடியேனும் அவள்மேல்மெய்க் காதல்வைத்
திட்டேன். யாரும்
போற்றிடுதற் குரியமதி பொறையாதி நற்குணமே
பூண்ட மேலோய்!

96 காதலனும் காதலியும் கடுகளவும் மாறாத
கருத்தினோடுங்
கோதறவே மணமுடித்துக் கொள்ளுவதில் ஏதேனும்
குற்றம் உண்டோ?
மாதவனே! எம்மிருவர் மனமுநனி மகிழ்வுறநல்
வரமொன்றீந்(து)அம்
மேதகைய வதுவை அதி விரைவில்நிறை வேற்றுகென
வேண்டினனால்.

97 தகவுறுநற் றுறவிஇவன் சாற்றியகா ரணம்கேட்டுச்
'சரி'என் "றன்பு
மிகுரோமி யோஜூலி யத்எனுமிவ் இருவருக்கும்
விவாகமானால்
இகலுறுமாண் 'டேகுகாபு லெத்என்னும் இருவருக்கும்
என்றுமுள்ள
பகைமையறும்" என நினைந்தான்; இருகுலத்தாரிடத்தினுமெய்ப்
பரிவு வாய்ந்தோன்.

98 ஈண்டிதனு னும்,ரோமி யோஇடத்தன்புள்ளவனாய்
இருந்த தாலும்,
மாண்டெகுவின் மரபிலங்க வருமதலை தனை நோக்கி
"வருந்தேல். மைந்த!
காண்டகுமிக் கன்னியை நீ கடிமணஞ்செய் திடற்குரிய
காரியங்கள்
வேண்டிய யாவையும் விரைவிற் செய்துமுடிப் பேன்என்ன
விளம்பினனே.

## வேறு.

99 இவ்விதம் கூறிப் பின்னும் இயம்பினன்: "மைந்த! கேளாய்!
நவ்வியேய் விழியுன் காதல் நங்கைஜூலியத்அங் குள்ளாள்;
இவ்விடம் இருக்கின் றாய்நீ. எண்ணிய நின்நல் எண்ணம்
எவ்வகை முடியும்? நீயே இயம்புதி" என்று கூற,

100 மாற்றலன் காபுலெத்தின் மனைக்குரோ ஸலினைக் காண
வேற்றுருக் கொண்டு சென்ற விதம் முதல், நிகழ்ந்த யாவும்
சாற்றினன். ஜூலியத்தின் சற்குணம் யாவும் கூறிப்
போற்றினன் பல்கால். பின்அப் புனிதனை நோக்கி, "ஐய!

101 ஏதமில் குணத்தோய்! யாங்கள் இருவரும் பிரிந்த காலை
தாதுகு சோலைக் கண்அத் தையலாள் என்னை நோக்கி
'நாதநும் மணநாள் தன்னை நன்கெணித் தூதி மூலம்
கோதறத் தெரிப்பல்' என்னக் கூறியுள்ளாள்" என்றின்ன

102 ஓதிவாய் மூடு முன்னே ஒருத்தி வந்(து), "ஐய! 'நாளை
காதல்கூர் மணநாள்' என்றுன் காதலி நிற்குக் கூறி
ஈதனைக் குற்ற நாளோ எனஅறிந் துறுமா(று) என்னைத்
தூதியாப் போக்கினாள். யான் சொல்வதென் அவளுக்(கு)?"
[என்றாள்.

103 இன்னணம் கூறக்கேட்ட இருவரும் ஆய்ந்(து) "உன் தேவி
சொன்னநாள் நன்னாளாகும். 'தோகைஈங்(கு)உறுக நாளை'
என்னயாம் சொன்னதாக இயம்புக அவட்''கென் றோத
மின்னினும் விரைவாத் தூதி மீண்டுஜூலியத்தைக் கண்டு,

104 "சாதுவா கியலா ரன்ஸின் தனிமடம் தன்னிற் சென்(று)உன்
காதலன் தன்னைக் கண்டு கழறுவ கழறினேன். அப்
போதவன் அங்கு வாழும் புனிதனோ டாய்ந்த தன்பின்
ஓதிய செய்தி ஈ(து)" என்றுரைத்தனள் உவக்கும் வண்ணம்.

105 நிச்சயம் தெரியா தேங்கி நின்றஜூலியத், தன்பால் வந்(து)
இச்சுபம் கூறு தூதிக் கேற்றநற் பரிசீந் திட்டாள்.
அச்சுப செய்தி தன்னை ஆருமே அறியாவண்ணம்
வைச்சுவான் சுடர்எப்போது வருமென வருந்தினாளே.

## வேறு.

106 மண்ணிற்கொரு மதியேயென வருஜூலியத் இன்னும்
நண்ணிப்பல நினைந்தேமனம் நைந்தாள். அவள் மார்பில்
கண்ணுக்கெதி ரிலனாகிய கழைவில்லவன் காணா
புண்ணிற்புகும் அயில்வேலெனப் பூவாளிகள் எய்தான.

107 தன்மார்பிடை மறையாகிய தனிவாளிதைத் திடலும்
அந்நாளையில் தன்மாளிகை யதனில்மகிழ் தந்தே
தந்நேர்இரு கரமாமலர் தமைப்பற்றினனாகி
முன்னே அவன் உரைதந்தஅம் மொழியாவையும் முன்னி,

108 "ஒருவா ரிதி இலை. ஏழெனும் உயர்வாரிதி களினும்
வெருவாவகை சென்றேயுனை மீட்டும் இவண் நின்னைத்
தருவேனெனும் உரைசொல்லினை. தமியேன்துயர் காண்பான்
வருவாய் இவண் தரியேன்இனி. வருவாய்விரை வினிலே.

109 “என்றேகமும் பொருள்யாவையும் எனதாவியும் ஏற்றென்
குன்றாப் பெருங்குணம்யாவையும் கொண்டாடி“என் உண்மைக்
கென்றே மிளிர் மதியேஎனும் இவையேகரி” என்றாய்!
நன்றோதுயர் நானுற்றிடல் நவிலாய் இவண் நண்ணி.

110 “ ‘வருந்தேல்’ எனும் உரைதந்திலை. மன்னா! இதும் அழகோ?
திருந்தார்கள்நம் மாபோரலால், திருந்தார் இருவேமோ?
இருந்தாதகி யொடுமாமரம் யாவும்உள சூழல்
இருந்தேபல பலகூறினை என்னே மறந்தனையோ?

111 “நாணத்துடன் வருநாற்குணம் நல்லார்க்குள நலனாக்
காணப்படும். என்பாலவை காணும்படி வாராய்.
வேணத்திய வழிநிற்கறி வித்தானலனோ?. சொல்.
ஆணுக்கொரு பெரிதோவெளி உளதாகிய அரணே.

112 “அடியாள்கர மதையுன்றன தழகார்கர மதனால்
பிடியா ‘இது அதி புண்ணியப் பெருமாதல மாகும்.
கொடிதாகிய பழியாமெனில் குளிர்முத்தம தொன்றால்
கடிதேயகற் றிடுவேன்’ எனும் கண்ணே! இவண் வாராய்.”

113 என்றே உரை தந்தாளிவள் இயல் யாவையும் ஆய்ந்தோம்.
குன்றாதமெய்க் காதல் கொளும் குணமிக்கஇந் நங்கை
தன்றேகமும் பொருளாவியும் தனதாக்கிய சீலன்,
ஒன்றோ? பல பலஉன்னினன் ஒருவாறது சொல்வாம்:

## வேறு.

114 “நின்பெரு மாளிகை நிலவு நின்றுநீ
அன்பினில் அறைவன அறைந்த பின்னரே
உன்பெரும் உளத்தின்உள் ளுறை அறிந்தனன்.
என்பெரும் துயர்இவண் எய்திக் காணுதி.

115 காதலின் மிக்கநீ கருதி என்னிடத்(து)
ஓதின யாவையும் உணரும் போழ்தினில்
ஏதமென் பனசிறி தேனும் எண்ணலை,
ஆதர வுளஒரு தமரின் ஆயினை.

116 "ஏயமெய் யன்புளாய் என்னில், என்வயின்
'தாயொடு தந்தையும் சார்ந்த யாவினும்
நேயம தகற்றிநின் னண்டை நிற்பன்'என்
றாய். அது மறந்ததென்? அறைதி உண்மையை.

117 "'வாயத னுற்பயன் வழங்கு வாய்'என
வே, 'அது வாழ்த்திட' என்ற மெல்லியாய்!
ஆயது நினைத்தனை யாகில், என்கொலோ
நீ யென துளக்கவல் நீக்கி டாமையே?

118 "இரவினில் யோசனை யின்றி இருவரும்
விரகின ராயவண் பேசி மேவுதல்
வெருவினன்" என்றனை. மெய்ய தாம். இவண்
விரைவினில் வருவையேல், மேவு மோதுயர்?

119 "பாலொடு தேன்கலந் தற்று பாவை நின்
வாலெயி றூறிய நீரின் மாண்புதான்.
மேலொடு பருகுவன் எனினும், வேளவன்
சாலவும் வருத்தினன். தக்க தோஇது?

120 "கயல்புரை கண்ணினாய்! கழற வேண்டுமோ?
அயலொரு பெண்ணினா லன்று யான் கொளும்
மயலெலாம்: நின்னிடம் வாய்ந்த காதலால்.
'இயல்வ தாகரவேல்' என்ப தெண்ணுதி.

121 "'சொன்னவா றியாவையும் தூதிற் செய்யலாம்.
சன்னியா சியுமுளன் மணமும் தான்செய'
என்னவே அறிந்துமிப் போழ்திங் கெய்தலை.
என்னையே நின்மனம்? ஏதென் றெண்ணுகேன்!

122 "பரவிய இரவிதே பகைய தாமென
உரைதர நினைவையேல், உண்மை யாகுமோ?
சரதமே நின் வயின் சாரச் செய்ததோர்
இரவல வோ? அதை எண்ணிக் கூறுதி.

123 “‘அன்பினிற் காளையர் யாதும் அறைகுவர்.
பின்பவர் வேறொரு பெண்ணிற் சேருவர்.
அன்றியும் நம்பகை யாவன் இன்னவன்’,
என்றுசற் றுயிலினும் எண்ணல் நீக்குதி.”

124 இன்னணம் பலபல இசைத் திரங்கியே
அன்னவன் அன்பினால் அறைந்த யாவையும்
என்னொரு நாவினால் இயம்ப ஒண்ணுமோ?
பின் இவை மதியினை நொந்து பேசினான்:

125 என்னுயி ரனையவள் எழிலுக்(கு) அவிர்தரு
உன்னொளி தாழ்ந்ததென் றுரைத்த தன்னியோ
நின் உளங் கறுத்தனை? நெடிய வான்இருந்
தின்னணம் காய்திநீ? இயம்பு வாய் மதி!

126 தன்னினும் மேலவர் இரக்கிற் றாழ்வுற,
அன்னதே இழிவென அறைவர் யாவரும்.
உன்னிடை யுறுமிதை உணர வின்றிமற்
றென்னிடை யேற்றிநீ எள்ள லொண்ணுமோ?

127 “மன்னனே! இரவினை மதி”யென் றேயுரை
பன்னிய அன்னவன் படரும் துன்பினில்,
“என்னையும் என்சொலும் இனி?”என் றெண்ணுறூ
அன்னதோர் இரவுமே அகன்று போயதால்.

### வேறு.

128 “என்னை வேண்டுநர் இவ்வுல கினில்இலை. இவர்என்
றன்னை வேண்டிடு தன்மைய ராயினர். காலம்
இன்னும் தாழ்த்திடல் சரிஇலை.” எனவரு வான்போல்
அன்ன காலையில் அருக்கனும் அவர்எதிர் ஆனான்.

129 இரவி எப்பொழு(து) எதிருவன் எனநினைந் தனளாய்
வரவு பார்த்திருந் தவள்,அவன் வந்தனன் எனில்அக்
கரவில் அன்புடை யாளனைக் காணுறும் பொருட்டு
விரைவில் மேவினள் அவ்விடம் என்பதும் வியப்போ?

130 சன்னி யாசிவாழ் தனிமடம் எய்திடத் தானே
கன்னி யேகினள். ஏகும்அக் கணத்தினிற் கண்டாள்
மன்னும் அன்பனோ(டு) அவண்உறை மாதவன் தனையும்
துன்னும் அன்பினிற் றொழுதனள் துகளிலாத் தோகை.

131 வந்து தாள்மிசை வணங்கின அவளைமா தவனும்
முந்தும் ஆசிகள் பற்பல மொழிந்தனன் முறையே.
தந்தம் அன்பினிற் குறைவிலர் தமக்கவண் மணமும்
உந்தும் அன்பினன் இயற்றினன். உரைத்தனன் பினரும்:

132 "இந்த மாமணம் இதுமுதல் இனிமைய தாக.
அந்த மாபகை அவரிடை அறவொழிந் திடவே
எந்தையே! திரு வுளமகிழ்ந் தருளுக" என்றே
தந்த னன்விடை இருவரும் தமதிடம் உறவே.

133 "நாத னே!இவண் இருந்திடில் நலமுறு தாயும்
தாதை யேமுதல் யாவரும் சமுசயம் அடைவர்.
ஆத லால்அவண் அடைதர விடையெனக் கரு"ளென்(று)
ஓத ஜூலியத், அதன்பினர் ரோமியோ இசைப்பான்:—

134 "ஏத மில்குணத்(து) இன்னுயிர்க் காதலி! இரங்கல்.
பேதை! முன்னுறு சூழலிற் பேரிர(வு) உறுவேன்.
போதி" என்றவன் புகன்றனன். புகலவும் பொன்னேர்
தீதி லாதவள் தன்மனை சேர்ந்தனள் சென்றே.

135 இரவி லேஒரு புதுஉடை எய்திய இளைஞர்
விரைவி லேஅதைத் தரித்திட விரும்பிநல் விடியல்
வரவு பார்ப்பது போன்றுநம் மங்கைஜூ லியத்தும்
பரிவி னோடுநல் இரவெதிர் பார்ப்பவள் ஆனாள்.

136 அன்று நண்பகல் அந்நகர் வீதியின் இடையே
சென்று கொண்டிருந் தார்கள்பென் வோலியோ,சீர்சால்
நன்று செய்யுமேற் கோடியோ எனுமிரு நல்லோர்:
ஒன்றும் அன்பினர்; ரோமியோ உளமகிழ் நண்பர்.

137 ஆய காலையில் அன்(பு) அருள் இரக்கம்ஒன் றில்லாத்
தீய ஞுபடை பால்த்தனும் தெவ்வனும், அவனை
மேய சில்உற வினருமவ் வீதியை மேவிப்
போய காலையில் அவர் எதிர்ப் போந்தனர் அன்னோர்.

138 எதிர்ந்த காலையில் மெற்கொடி யோஎன இசைக்கும்
வதிந்த நற்குணன் றன்னுடை மலர்முகம் நோக்கி
அதிர்ந் தெழுந்(து)‘ இவன் றன்னையான் அடுவன்’ என் றிசையா
முதிர்ந்த கோபமோ டின்னணம் மொழிந்தனன் டைபால்த்:

139 “மாற்ற லன்,சிறு மாண்டெகு வின்குல மகனுக்(கு)
ஏற்ற தோழன்நீ அல்லனோ? இயம்புதி. மற்றும்
வேற்று ருக்கொடு மேயமற் றவனுடன் ஆங்கே
நேற்றை முன்னைநாள் வந்தனை அல்லையோ? நிகழ்த்தாய்.

140 “உன்னைப் போலஓர் மானமென் பதுசிறி தில்லான்
தன்னைக் காண்கிலன்” என்றவன் சாற்றலும், தாழா(து)
‘என்னை நீஉரைத் தாய்?’என எழுந்தனன். சீறி
நன்ன லத்தபென் வோலியா மற்றிவை நவில்வான்:—

141 “கேட்ட யாரையும் பிணிக்குறும் தகையதாய்க் கேளார்
வேட்கு றும்படி மொழிவதே சொல்லதாம். வீணு
நாட்டம் நீஉக நன்மையல்லாதன நவின்றாய்.
மீட்டும் இவ்வுரை விளம்பிடல் விளம்பிடல்”என்றான்.

142 “உன்னை யாரடா கேட்டவன் உரைத்திடு கென்ன?
என்னை யாரென எண்ணினை ஏழைநீ?” என்று
அன்ன வன்றனைக் கன்னமீ தறைந்திட டைபால்த்,
இன்ன எண்ணினன் எவர்க்கும் இன்புரைக்கும்அவ் இயலோன்.

143 “கற்ற யாவையும் கற்றிலான் தன்செவிமாட்ட
லுற்ற இப்பிழை யுள்ளது நம்மிடை யன்றே?
முற் றுணர்ந்தவர் அவன்நிலை அறியென மொழிவார்.
அற்றம் நோக்கிடா தறைந்தது பிழை”யென என்றே.

144 அன்ன காலையில் ரோமியோ ஆங்குற, அவனைத்
துன்னி வஞ்சடை பால்த்துவன் சொல்பல சொற்றான்.
என்ன கூறியும் இம்மியும் எய்திலான் சீற்றம்
தன்ன தாருயிர்க்காதலி தனக்கவன் உறவால்.

145 அன்றி யும்அவன் அமைதி மிக்குடையனா கலினும்,
நன்று செய்பெருங் குணமுள நல்லனாகலினும்,
என்றும் அவ்விரு குலத்தவர்க் கிருந்தவெம் பகையில்
ஒன்றி லனெவர் பக்கமும்,உத்தம நெறியோன்.

146 சீற்ற மிக்ககா புலத்தவர் செற்றல ரெனினும்
போற்று ஜூலியத் அக்குலப் பூவையா தலினால்
சாற்று 'காபுலத்' எனுமொழி, தாங்கொணாச் சீற்றம்
ஆற்று மந்திர மொழியென ஆயது மன்னோ!

147 ஆத லால்அவன் "அந்தடை பால்த்அரு கினிற்போய்
நீதி யாகிய சொற்சில நிகழ்த்தின னெனினும்
ஓதி னாற்பயன் உறுங்கொலோ உணர்விலாதவற்கு?
தீது ருக்கொடு வந்தடை பால்த்இவை செப்பும்:—

வேறு.

148 "நின்றனை வோரொடும் அன்வறண் நின்றனை நீயன்றோ?
உன்றனை வோரொடும் உன்னுரு மாற்றி நீ உற்றாயே.
என்றனை வர்க்கொரு வெம்பழி யெய்திட வில்லாதே
கொன்றனை நீக்குவன்" என்று கொதித்தனன் கோதுள்ளான்.

149 மேயடை பால்த்திடை நன்மொழி கூறிய மேலோனை
ஏயநல் வீரமும் தீரமும் எங்குகுத் திட்டா னென்(று)
ஆயமேற் கோடியோ போயினன் போயவண் அதிர்ந்தேசும்
தீயினும் தியவெவ் வாயுடைத் தீயனை வைதானே.

150 வெருவில னாகியம் மாற்றலன் தன்னிடை மேவாமுன்
வருகுவை. தாழலை. என் தனி வாளினில் மாய்வாயே
பொருமித மிதழொழி. பேசுதி யா!" எனப் பீடில்லான்
உருவினன் வாளினை. உருவவும் கண்டனர் உற்றோரே.

151 மற்றொரு தோழனும் மாண்டெகு மைந்தனும் மன்றாடி
'உற்றது மற்றிதில்' என்ன இசைக்கலும் உன்னா னாய்க்
கொற்ற மிகுத்தமேற் கோடியோ தன்அருங் குணமேதும்
சற்று மெண்ணாதவன் நற்றலை வீழ்த்தினன் தகவில்லான்.

## வேறு

152 கையன் செய்கொலை கண்ட ரோமியோ
வெய்ய தீயின் வெகுண்டு தன்னுரு
தூய்ய சென்னி துணிந்த தாமென
நைய இன்ன நவில லுற்றனன்.!

153 "பாவி! யாவரும் பார்க்க என்னரும்
ஆவி நேரவன் ஆவி கொள்ளவோ
மேவி னாய்?" என வீசிவாள்கொடு
பூவின் வீழ்த்தினன் போற்ற லான்றலை.

154 காயும் வெஞ்சினம் வந்த காலையில்
மாயும் வெந்தொழில் செய்வர் மாந்தர்க
ளாயின், அச்சினம் அன்ன கீழ்மைய
தாய புன்குணம் ஆயின் மற்றெதே.?

155 கொன்ற செய்தி கொடிய தீயினில்
சென்று சேய்மையும் சேர வேமனம்
கன்று மாண்டெகு காபுலத் தவர்
துன்றி னார்கள் தம் தோகை யாரொடும்.

156 விரைவின் இச்செயல் வேந்தன் மாளிகை
பரவ லுற்றது. பரவ அக்கணம்
புரையி லாதநற் புனித னாகிய
அரச பூபதி அங்குற் றானரோ.

157 மன்னன் பேன் வோலியோவை "வாய்மையாய்!
உன்றனை துரைத்தி" என்னலும்,
முன் னிகழ்ந்தவை மொழிய லாயினன்
தன்னமும் துயா[illegible]ர லாவகை.

158 மாற்ற லார்கொலை யுண்டெப் புறுந்தகற்
சேற்ற காரணம் இன்ன வாமெனச்
சாற்ற மன்னவன் தன்னு ளேஎழு
சீற்றம் ஆறினன் செய்ய கோலினான்.

159 பாப மிக்கடை பால்த்தின் பந்துஅக்
காபு லத்துவின் காத லாளதால்
மாபு யப்பல மன்ன வன்முனர்ச்
சோப முற்றவள் சொல்லி னாள்இவை:

160 “கோதி லாதடை பால்த்தைக் கொன்றஅப்
பாத கற்குநீ பரிவு கூர்ந்திடல்
நீதி யல்ல.அந் நீசன் செய்தவெந்
தீதி னுக்குறு தீர்ப்பு ரைத்தியால்.

161 “மற்றும் அன்னவன் மகிழ நண்பனாய்ச்
செற்ற மாண்டெகு சேர்கு லத்தனா
யுற்ற பென்வோலி யோவின் சொற்களைச்
சற்றும் நம்பல்த காது மன்னவ!”

162 என்று ரைத்தனள். ஈதி சைப்பளோ
ஒன்றும் அன்பினன் உற்ற தன்மகட்
கென்று, காபுலத் தின்ப நாயகி
அன்ற றிந்தனள் ஆயின் இங்ஙனம்?

163 மற்றை மாண்டெகு மனைவி வந்தவண்
“இற்றை நாள்மகட் பிச்சை ஈதியால்
கொற்ற வா!” எனக் கூறி வேண்டியே
சற்றும் தாழ்கிலாச் சாற்றல் மேயினாள்:

164 “வேந்து! கேட்டி: மேற் கோடி யோவெனும்
சாந்தன் ஆருயிர் தன்னை மாய்த்தஅப்
பாந்தள் நேரும்டை பால்த்தைக் கொன்றதிங்(கு)
ஆய்ந்த நால்முறை ஆகும்” என்னவே.

24

165 மைந்தன் ்தி நேயம் ெ திடு
சிந்தை யா ைவை செப்பல-ஆயினள்.
அந்த வண்ணமற் றறையல் ஆணைதைப்
புந்தி கொண்டிலன் புவன மன்னனே.

166 ஆண்டு தன்மனத் தாய்ந்து நோக்கியே
"மாண்ட கென்பவன் மைந்தன் ஆமிவன்
ஈண்டு நின்றயல் தேயம் ஏகிட
வேண்டும்" என்றனன் வேந்தர் வேந்தனே.

167 இந்த வாறுரைத் தேந்தல் ஏகலும்,
வந்த மாந்தரும் வாடி ஏகினர்.
சிந்தை நொந்தினிச் செய்வ தென்னன
அந்த ரோமியோ அகத்தில் எண்ணினன்.

168 மற்றிப் போதில்அம் மைந்தன் தன்செயல்
இற்ற தாம்.மணம் ஏய்ந்து காதல்நோய்
உற்ற சூலியத் துள்ளம் நொந்தவண்
சொற்ற வாறுமேற் சொல்லு வாமரோ:

189 அன்று காலையில் அங்கை பற்றிய
தன்று ணைக்கிது சார்ந்த தாமெனில்
ஒன்றும் அன்பினள் உற்ற வாறிதாம்
என்று ரைத்திட எண்ணில் ஆவதோ.

வேறு

170 ஆசறும் அன்பினள் ஆயினும் அன்னாள்
வீசி எழுந்திடும் வீங்கெரி என்னப்
பூசல் மனத்தொடு புல்லிய சொற்கள்
பேசினள் உற்ற பெரும்பழி ஓர்ந்தே.

171 "பாவ வுருக்கள் பலப்பல ஈங்கோர்
தேவ வுருக்கொடு சேர்ந்ததை மான
மேவரு மெய்யெழில் கொண்டு விரும்பும்
பாவையர் இன்புறு பாதகன் அன்றே,

172 "தன்னுரு வாலொர் தனிப்புற வொப்பான்
மன்னுயிர் யாவும் வயிற்றிடை வைப்பான்
இன்னவன் எண்ணில் இராக்கதன் ஆவன்"
என்ன மொழிந்தனள் இட்டம் மறந்தே.

173 "மாரன் விடுக்கு மலர்க்கணை மார்பிற்
சார, நினைந்தனள், தன்னுயிர் போல்வான்
சீரதெ லாம்:இவன் தீங்கிலன் ஆகி
நேரல னுயிர் நீங்கின னன்றே.

174 என்னினும் இந்த எழிற்பதி நீங்கி
அன்னிய நாட்டில் அணைந்திடும் ஆறு
மன்னியல் ஆணை மணாளனுக்'' கென்ப(து)
உன்னினள் உன்னி உளந்தளர் வுற்றாள்.

175 நீலவி ழிப்புனல் நித்திலம் என்னச்
சால வடித்தனள் தன்மனம் வாடி.
மூல முணர்ந்த முனிமடம் வைகும்
பாலன் இயற்கை பகர்ந்திடு வாமால்.

## வேறு

176 மன்னன தாணை கேட்டு வருந்தியுள் வாடி நொந்து
"இன்னதோ ராணை தன்னில் என்சிரம் கொய்தல் நன்றே.
என்னினிச் செய்கு வே"னென் றேங்கியவ் ரோமியோவும்
தன்னுளே அடைந்த துன்பம் சாற்றிட வல்லார் யாரே?

177 "இப்பிர பஞ்ச மெல்லாம் இந்நகர் மதிற்குள் அன்றோ?
எப்படிப் பிழைப்பேன் என்றன் இன்பநா யகியை நீங்கி
தப்பில்அன் புள்ளாள் வைகுந் தலமதே சுவர்க்கம். அல்லால்
எப்புற மெனினும் பொல்லா எமபுரம் ஆகும் அன்றே!

178 "அரைசன தாணை தன்னில் அதிவலி படைத்த ஆணை
உரைசெயில் வேறொன் றில்லை. உஞற்றுவ தெவனோ?" என்று
கரைசெயற் கரிய துன்பக் கடலிடை ஆழ்ந்தான். உண்டோ
விரைசெறி கோதை யார்தம் விரகத்தின் மேலாந் துன்பம்.

179 சாதலை நினைவான்; பின்னர்த் தணிகுவான்; தானே நெஞ்ச
நோதலை அடைவான்; இன்ன நோக்கிய சந்நியாசி
தீதிலா நீதி சொற்றும் தெளிந்திலன். தெளிவ ரோகொல்
மாதரார் மயலிற் பட்டு மனந்தடு மாறும் நீரார்?

180 செவ்விதழ் மடந்தை யாள்மேல் சிந்தையைப் போக்கிப்
இவ்வித மாக மிக்க இன்னலுற் றயருங் காலை [போக்கி
நவ்வி தன் நோக்கே யன்ன நோக்கினள் நவிற்று கென்னும்
அவ்விதச் செய்தி தன்னை அறைந்தனள் அவள்தன் றோழி.

181 ஆயதோர் காலை தன்னில் அவனுளம் சிறிது தேறி
ஏயதோ ரிரவு தன்னில் எய்திமற் றவளைக் காண்பல்
மேயதோர் துன்பம் தானும் விலகிடு மென்னத் தேர்ந்தான்.
தூயனாம் சந்நி யாசி யிவையிவை சொல்ல லானான்:

182 "ஆண்மக னலனோ நீதான்? அச்சம தெய்தல் நன்றோ?
நாண்மடம் அச்ச மாதி நலனுறுங் குணமுள் ளார்போல்
வீண்செய லாகுமென்றே? விடுவிடிவ் வறிவில் செய்கை.
காண்டகுன் காதற் பன்னி பந்துவைக் கடிந்தா யன்றே?

183 "அன்னது போதா தோதான்? அதுஒழித் தைய! நீயே
உன்னுயி ரொழிக்க எண்ணை னான்பொருட் டுயிரொ டாங்கே
மன்னிய மனையா ளாய மாசிலா மணியும் மாய
உன்னுதி கொல்லோ? இன்னே ஒழி. இது மறந்தும் எண்ணல்.

184 "அரிதரிதெனமுன் மேலோர் அறைந்ததே தெனத்தான் நோக்கில்
தெரிதரு மனுட தேக மாமெனச் செப்ப லாமால்.
உரியவத் தேகந் தானும் உளத்திட மிலதேல் வீணாய்ப்
பெரியதோர் மெழுகிற் செய்த பிம்பமாப்பேச லாமால்.

185 அன்றியும் நின்மேற் சற்றே அரசனும் கிருபை செய்து
கொன்றிடா தாரை விட்டுப் போவெனக் கூறி னானே.
நின்றனைக் கொல்ல வந்த நேரலன் றனையுங் கொன்றாய்.
இன்றிதற் கதிக வின்பம் எய்திட லன்றோ ஏற்றம்?

186 சூலியத் தென்று சொல்லும் தோகையும் பிழைத்து நின்றாள்.
மேலிமை காரி யத்தால் வேண்டிய மனையுமானாள்.
பாலிய னெனநின் றன்மை படைத்தனை. என்னே! ஈது
போலிமை சுகமு முண்டோ புகலுதி! தெளிவிலாதோய்!"

187 என்றுநற் றுறவிஇன்பொ டின்மொழி கூற, அன்னோன்
அன்றுரைத் ததையே கூறி அவசமே யுற்றான். ஏதும்
தன் குறிப் பதனில் கொள்ளாச் சண்டியாம் பெண்ணேபோல
நன்றெனக் காதிற் கொள்ளான். நயப்பரோ நங்கைப் பித்தர்?

188 "ஊக்கமென் பதுதான் சற்றும் உளத்தினி லில்லாராகி
ஏக்கமுற் றிருப்பரெல்லாம் இகசுக மிழத்தலன்றி
மோக்கமு மடையார்; தீய மரணமாய் முடிவ ரன்றே.
ஆக்கம்வேண்டுதியேல்இன்ன தறிதி"யென் றறவன்சொன்னான்

189 தீரனே என்ன யாருஞ் செப்பிடுந் தாத்த னேனும்
கோரமாம் மரணமென்று கூறிடிற் குலைவா னன்றோ?
நேரதாய் முனிவன் அங்கு நிகழ்த்திய மொழிகள் யாவும்
வாரமாய் மனதி லேற்று மகிழ்ந்தனன் மைந்தன் றானே.

190 "மனந்தெளிவுறல்கண் டந்தமாதவன் மொழிவான்: "மைந்த
அனந்தலை யடையேல்! உன்றன் அன்புள மனையாள் பால்இத்
தினமிர வதனிற் சென்றுன் சிந்தை நோய் தீர்த்துப் பின்னவ்
அனந்தரு விடைபெற் றேகி யடைதிநீ மாஞ்சுவாவே.

191 "அந்நக ரதனிற் சின்னா ளமர்ந்திருந் தனையே யாகில்
இந்நக ரதனில் முன்னா ளிருவரும் மணம் முடித்த
நன்னயச் செய்தி தன்னை நான்வெளி யிடுவேன். பின்னர்
உன்னத வமிசத் தோர்கள் உறவின ராவ ரன்றோ?

192 "நெடிதுநாட் பகையா யுள்ள நின்பெருந் தந்தை யோடும்
ஒடிவிலா வழகு வாய்ந்த உன்மனை தந்தை தானும்
தடிதலில் அன்ப ராகத் தாம்அமர்ந் திடுவராகில்
படிதனைப் புரக்கும் வேந்தன் தண்டமும் பாரா னன்றே.

193 "அதுபொழு தையா! மைந்த! அறைகுவல் கேட்டி! நீதான்
இதுபொழு திவண் நின்றேக எய்திடும் வருத்தம் தன்னில்
கதுமெனத் தோன்றும் மிக்க கனசுகம் காண்பாய்" என்னக்
குதுகலிப் படைந்து மைந்தன் குருபதம் வணங்கினானே.

194 வணங்கிநின்(று) "ஐய என்றன் வாள்விழி மனையாளாகும்
அணங்கினை அண்மி யன்னா ளகத்திடை யமர்ந்து பின்னர்க்
கணங் கொளு மிரவு தானும் கழிந்திடுமுனரே யிவ்வூர்
தணந்தர சுரைத்த தேயம்சார்குவன். விடைநீ தாராய்."

195 என்றனன். அதனைக் கேட்டே யிரங்கிய சந்நியாசி
"நன்றுநன் றுரைத்தாய் ஐய! நலமுடன் சென்று வாராய்
அன்றியு முரைப்பல் கேட்டி: அடுக்கடி கடிதமூலம்
ஒன்றுபல் செய்தியாவும் உணர்த்துவன் சேறி" என்றான்.

## வேறு.

196 இன்னதோர் காலை இரவுமே வந்தங்
கெய்திடரோமி யோநொந்த
தன்னையே துணையாய்க் கொண்டுசெல் பவனாய்த்
தனிமையில் முன்னை நாள் நின்று
சொன்னதோர் சொற்கள் யாவையுங் கேட்டுச்
'சொல்லுதி சொல்லுதி' என்னப்
பன்னியே நின்ற அந்தமாச் சூழற்
பக்கலில் நின்றனன் பார்த்தே.

197 காதலன் றானுங் கடிமதில் தாண்டிக்
காதலி தன்னையேகாணும்
ஆதரத்துடனே அவ்வயின் நின்றான்.
ஆயினு மவளடைந்திலளால்,
தாதவிழ் குழலாள் சயனமா ளிகையில்
சார்தலே நலமென வெண்ணிப்
போதரும் சத்தம் அவனுளோர் செவியிற்
புகுந்திடா வண்ணமே போந்தான்.

198 போர்த்துமா ளிகையிற் புகுதலு மாங்கே
பொலன்கொடி பொம்மெனத் தனது
சாந்தணி மார்ப மதனிடை யன்பன்
றன்றிரு மார்பகந் தழுவக்
காந்தெரி வீசும் கதிர்மணி களினாற்
கவின்பெறச் செய்த ஓர் மஞ்சம்
சேர்ந்திரு வருமா யேறிவீற் றிருந்தார்
செப்புவாரெவரவர் தன்மை?

199 ஆங்கெதிர் முகமாய் அமைத்தகண் ணாடி
யதனிடை யவர்முக நோக்கி
வீங்குபே ருவகை கொண்டனர். பின்னர்
மெல்லியல் தன்முக நோக்கி
"எங்கிதோ ரிரவே யெஞ்சிய தாகும்
இருந்திட நின்னொடும். இதனால்
ஏங்குமென் னெஞ்சம் என்செய்வேன்?" என்றான்.
என்னலுங் கேளென இசைப்பாள்.

200 "நாதநீ வாட நான்சகி யேனால்
நலனெனப் படுவதை நாடில்
ஏதமில் அன்பன் உடனுறைந் திடுதல்
என்றிசைத் திடுவரால் யாரும்.
ஆதலால் அடியேன் உன்னுடன் வருவேன்.
அன்பனே! இதில் இலை ஐயம்.
வேதனை சிறிதும் மற்றிதில் உண்டோ?
விளம்புதி" நீ எனக் கென்றாள்.

201 என்றுரைத் திடலும் கேட்டரோ மியோவும்
"என்னுயி ரனைய நாயகியே!
நன்றுநன் றுரைத்தாய். ஆயினும் இதனை
நாடிடின் நலமிலை யாமால்.
இன்றுநான் உன்னை என்னுட னழைத்தே
ஏகுவ னெனில் இவண் பழிகள்
ஒன்றல பலவேயெய்திடு மதனால்
உரைப்ப தொன்றுள ததைக் கேட்டி:—

202 "சோற்றினுக் கின்றித் துயரமேகொண்டு
தொலைவிலா நடை யுழந்தனளாய்
எற்றிடும் பிச்சை உணவுகொண் டுறையும்
இழிகுலத் துள்ளவ ளேனும்
வேற்றல னுடனே சென்றன ளென்று
விளம்பிடிற் பழி மிகமேவும்.
மாற்றல னுடனே வருவனென் றுரைத்தாய்
மன்னுமோ இதிற் பெருமையுமே?

203 "ஆதலா லரசன் ஆக்கினைப்படியே
அடியனேன் அன்னிய தேயம்
போதலே நன்று. மற்றிவண்ணீதான்
பொருந்தலே நன்" றெனப் புகன்றான்.
காதளா வியகண் காதலிதானும்
கணவனை நோக்கினள் கரைந்தே
"மாதயை யுடையை யென்றிருந்தேற்கு
வழுத்தினை மாண்புற" என்றாள்.

204 "காமமொன் றினையே கருத்தினில் நினைந்து
கண்டவர் பின்செலக் கருதும்
தோமுறு மடவார் தம்மையே மானச்
சொற்றனை நன்றுநன் றரசே!
நாமநீர்க் கடல்சூழ் நானிலமதனில்
நாயகன் பின்செல நயத்தல்
ஏமமே யன்றோ? இல்லென யாரே
இயம்புவர் நீயலால் இவணே?

205 தனக்கொரு குறைதான் சாரினும் தன்னைச்
சார்ந்தவள் தன்னையுங் காப்பான்
மனத்தினில் தரும நினைவுளா னென்னு
மாண்பையு மறந்தனை யன்றே?
இனத்தவ ருடனே இல்லவள் தனையு
மிகந்துநீ ஏகுவை என்னில்
உனத்தகும் பெருமை உளதுகொல் நாத!
உரைத்திநீ" என்றனு முரைப்பான்;

332 "நேயமே பூண்ட ரோமியோ வின்பால்
நிகழ்ந்தன தெரித்திடு மாறே
வயநாம் முன்னம் அனுப்பிய ஆள்வன்
இன்னமும் மீண்டிலன்?" என்று
தூயனும் லாரென்ஸ் துனிவுமிக் கெய்தி
ஜூலியத் தான்புகு வகை, 'நாம்
போயவள் சிறையை நீக்குவம்' என்னப்
போந்தனன் அவ்விடம் மாதோ.

333 தன்கையில் விளக்கும் கோடரி ஒன்றும்
தான்கொடு வந்தஅச் சாது
முன்னிலை யதனில் தீபமொன் றனையும்,
முன்னமே இருவரும் தம்முள்
முன்னிய செருவில் உயிரிழந் தவராம்
மொய்ம்புள பாரிசின் உடலும்
மன்னிய ரோமி யோவின துடலும்
மண்மிசைக் கண்டனன் மாதோ.

334 பார்த்தனன் 'இந்தப் படியெலாம் நிகழும்
பண்பெனோ? யானுளம் விரும்பித்
'தீர்த்ததும் பகையை,'ச் 'சேர்த்ததும் அவரை'ச்
செவ்விது! செவ்விது!" என்றுடலம்
வேர்த்தனன். ஏதும் விளம்பிலன். யாங்கும்
மீளவும் நோக்கிட அந்தத்
தீர்த்தனுக் கெதிரில் ஜூலியத் எனுநம்
சேயிழை வந்துநின் றனளே.

335 தன்னெதிர் வந்து நின்றஅ ணங்கு,
"தண்ணளி சான்றமா தவ!நீ
சொன்னதோர் காலம் கழிந்தது. மற்றுச்
சொல்லிய வாறுசெய் தேனே!
என்னொதா ருயிர்நேர் நாதனைக் காட்டின்
என்துயர் நீங்கும்" என் றிசைத்தாள்.
அன்னவள் மாற்றம் கேட்டஅத் தூயோன்
அகமிக நொந்திலை கூறும்

336 "நிருமல குண! நிற் கிசைத்த அவ் வண்ணம்
நிகழ்ந்திடா(து), அம்மணி! இன்று
'வரும்விதி யதுதான் வழியிலும் தங்கா(து)
என இவண் வாய்த்தது கேளாய்.
ஒருவரோ,? அந்தோ! இருவரு மாண்டார்.
எனஉரைத் துத்தமன் தானும்
வருபவ ரொலிகேட் டவ்விடத் திருந்து
மறைந்தனன். மங்கையே நின்றாள்.

337 நின்றஅந் நங்கை தன்உளம் அழிந்து
நீணிலம் அதனில் வீழ்ந் திறந்த
தன்துணை வனது திருமுக நோக்கிச்
சாற்றரும் துயரடைந் தனளாய்,
'இன்றெனை வந்தே மீட்பனென் றெண்ணி
இருந்தனற் குதவிய திதுவோ!'
என்றுரைத் தவன்மேல் வீழ்ந்தனள். அழுதாள்.
என்செய உளதுமற் றவட்கே?

338 ஆயதன் மையினில் வீழ்ந்தழு திடுவாள்
அவனியிற் கிடந்ததன் அரிய
நாயகன் கையிற் கிண்ணமொன் றிருப்ப
நாடினள் மற்றதை எடுத்தே.
'மாயஇக் கிண்ணம் எவன்கொலோ கொண்டு
வந்தனன்?' எனத்தனுள் எண்ணி
நேயமிக் குடையாள் அதைநனி நோக்கி
நினைத்தனள் பின்வரு மாறே:

339 "வந்தவர் 'இறந்தே இருப்பென்' என் றெண்ணி
வருந்தியே, தாம்வரும் போதே
இந்தஓர் கிண்ணம் தனில்படு விஷத்தை
இட்டிவண் கொண்டுவந் தனரோ?
நொந்தெனை நோக்கி மற்றதை அருந்தி
நொடிப்பொழு தினிலிறந் தனரோ?
அந்தமா விஷம்இங் கிருந்திடில் அருந்தி
அவர்கதி அடைவ"னென் றறைந்தாள்.

340 அறைந்த அவ் வணமே செய்திட எடுத்த
அக்கிணம் தனில்விஷம் சிறிதும்
உறைந்தில ததனால் 'அஃதுயிர் நாதன்
உதட்டிடை உறையும்' என் றன்பு
நிறைந்தபன் முத்தம் ஈந்தனள் அவற்(கு) அந்
நேரமங் குச் சிலபேர்கள்
செறிந்திடு சத்தம் கேட்டனள். ஆங்கே
திகழ்ந்தவாள் ஒன் றதைக் கொண்டாள்.

341 கொண்டவா ளோடும் குறுகி,அவ் விஷத்தைக்
குடித்(து)அவண் தன்உயிர் நீத்த
கொண்டவன் எதிரே துணிந்துமுன் நின்று,
கூசிடா தோங்கிஅவ் வாளால்
துண்டமோ ரிரண்டு படும்படி தன்னைத்
துணித்தனள் புவிமிசை வீழ்ந்தாள்.
பெண்டிரில் இவள்போல் பேசிடில் யாரே
பெரும்செயல் துணிந்துசெய் துள்ளார்?

வேறு

342 இன்ன காலையில் எய்தினர்
மன்னு காவல்செய் மானிடர்.
அன்ன காலையில் அவ்வயின்
துன்னி னன்செயல் சொல்லுவாம்.

343 யாவன் இன்னவன் என்னிலோ,
மேவு போரில் விண் மேவும்அ
பாவி யாகிய பாரிசின்
ஏவல் செய்திட ஏய்ந்தவன்.

344 அன்ன வன்தன தாண்டவன்
பொன்ன கர்க்கண் புகுந்தனன்
என்னும் எண்ணம தெய்தியே
துன்னு துன்பினிற் றோய்ந்தனன்.

345 இன்னல் எய்திய ஏவலன்,
“மன்னு மாநகர் மாக்களே!
இன்ன வேளை எழுமின்நீர்”
என்னக் கூக்குரல் இட்டனன்.

346 வந்து கூடிய மற்றவர்க்(கு)
இந்த ஏவலன் “எய்திய
சிந்தை ஆகுலச் செய்திதான்
எந்தையீர்! இஃ(து) என்றனன்.

வேறு

347 என்றவன் சொல்ல அவ்வயின் கூடி எய்தியவர்
‘நன்றிது’ என்று ரோமியோ அங்கந் நாள்வந்தே
கொன்றது முதலா யாவையும் எண்ணிக் கூறுற்ற(து)
ஒன்றுபின் ஒன்றாய் யாவரும் அறிய உரைசெய்வாம்.

348 “ஊரினை விட்டே வேறொரு தேயம் உறஅன்று
பாரினை யாளு மன்னவன் சொன்ன படிசென்றோன்
காரிருள் தன்னில் இந்நகர் கண்ணே கால்வைத்தே
பாரிசின் ஆவி போக்கினன் என்னே! பார்” என்பார்:

349 “மானனை யாளை வேட்டஅப் பாரிஸ் மைந்தன்தான்
ஏனவண் ஈமம் ஏகினன்? ஏகி எதிர்த்திட்டான்?
வானடை வதனுக் கோ?அவன் உற்றான்? வந்தானுக்(கு)
ஆனவோர் கதிதான் ஈதுகொ லோ?”என் றறைவாரால்.

350 “அன்னவனோதான் ஆவிமு டிந்தான்? அவனன்றி
இந்நகர் வந்தான் தானுமு டிந்தான்” என்பார்கள்.
சொன்னவர் ‘பாரிஸ்’ ‘ரோமியோ’ ‘ஜூலி யத்’என்றே
அந்நகர் வீதி யெங்கும் அலைந்தே அறைந்தாரால்.

351 ஜூலியத் என்னும் தோகையை எண்ணித் துன்புற்ற
பாலிய னும்அப் பாரிஸ் எனும்பேர்ப் பண்பாளன்
பால்இயை செய்தி நோக்கிடில் ‘இல்லை பாராள்வோ
னால்இயை நன்மை” என்றுபு கன்றார் அவரெல்லாம்.

352 இன்னணம் யாரும் சொல்லிட லுற்றார். இதுகேட்டே
அந்நகர் தன்னில் உன்னத வம்சத் தவர்என்ன
மன்னிய மேன்மைக் காபுலேத் தோடு மாண்டேகு தம்
துன்னிய அமளி விட்டன ராகித் தோன்றுற்றார்.

## வேறு

353 ஊரார்யாரும் ஒன்றாக உற்றே உரைக்கும் ஒலிகேட்டுப்
பாராள் மன்னன் தானுமவண் பார்க்க எண்ணிச் சேர்ந்தானால்.
காரா ரிருளிற் கள்வனெனக் கண்டார் யாருங் கண்டிரங்கச்
சீரார் லாரேன்ஸ் எனுமவனைச் சேர்த்தார் அரசன் திருமுன்னர்.

354 வந்து சேர்ந்தான் தனைநோக்கி, மன்னன் தானும் "மாசில்லோய்!
எந்த நாளு மில்லாத இந்த விபரீ தச்செயல்கள் ["எனப்
இந்த நாளில் நேருவதற் கென்னே நேர்ந்த(து)?" இசைத்தி
பந்த மற்ற முனிவரனும் பகர்வான்: "அரசே! நின்னாட்டில்,

355 "மாண்டே குடன்கா புலத்என்றும் மாற்றாராக அமர்ந்திடுதல்
காண்டல் விரும்பா உள்ளத்தேன், காபுலேத்தின் கன்னியினை [று
மாண்டே கின்புத் திரனுக்கு மணப்பின் நீங்கும் அவர்பகை"என்
ஈண்டு வதுவை செய்வித்தேன் யானே சின்னாள் முன்னாக.

356 "ஆத லாலிவ் ஆண்டகையே அவள்தன் கணவன் அக்கன்னி.
ஏத மில்லான் தன்மனைவி." என்றே அவரை எதிர்காட்டத்
தாதையோர்கள் இருவோரும் தாங்கற் கரிய துயருழந்தார்.
கோதி லாஅம் முனிவரன்பின் கூறலுற்றான் வருமாறே:

357 "இம்மாச் செய்தி வெளியிடஎற் கேற்ற சமயம் பார்த்
திடும்போ(து)
அம்மா தினுக்கு மணம்செய்வான் அமர்ந்தான் தந்தை.
அவ்வணிதை
விம்மா வணமோர் நன்மருந்து விரும்பித் தந்தேன்.
அதைஉண்டாள்.
பெம்மான்! நடந்த திதுவாகும் பின்னர் நடந்த(து)
அறிவாயே.

58 "பெற்றார் மிக்க வருந்தித்தம் பெண்ணின் ஆவி நீங்கிற்றென்(று).
உற்றா ரோடும் அழுதவள்தன் உடலை யீங்கே வைத்தகன்றார்
அற்றால், ரோமி யோஇவண்வந் தரிவை தன்னை மறுநாளே
செற்றா ரறியா வகையழைத்துச் செல்வான் அவன்பால்
ஆள்விடுத்தேன்.

59 "அவ்வாட் குற்ற தென்னோஎன் றறியகில்லேன்: அரிவையிடம்
தவ்வாக் காத லுள ரோமி யோமற் றீங்கு சார்ந்திலனால் [போ(து)
'எவ்வா றேனும் அவள்சிறையை யாமே தவிர்ப்பம்' எனவரும்
இவ்வா றிவர்க ளிருவோரும் இறந்தே கிடக்க யான்கண்டேன்.

360 "நல்லோய்! நிகழ்ந்த திதுவல்லால் நான்வே றறியேன்" என் றுமுனி
மல்லார் தோளான் தன் அருகே வந்து நின்றான். மற்றுமுள
எல்லாம் உள்ள படிஉரைத்தார் இறந்தோர் ஏவலார். ஒருவன்
பல்லோ ரறிய ஒருநிருபம்பணிந்தங்(கு) ஈந்தான் மாண்டேகுபால்.

361 அன்னான்உதவு நிருபமதை ஆவலோடும் அவன் வாங்கித்
தன்னா ருயிர்நேர் மகனவான் தானே எழுதி இருக்கக்கண்(டு)'
என்னே! இந்நாள் காறுமிலா தின்று நேர்ந்த தெழுதஇவன்!'
என்னாத் எண்ணித் தன்னுள் அதில் இருந்தவிஷயம படித்தானால்.

வேறு

362 "மிக்கார்வம் உளஎன்றன் தந்தை நின்தாள்
மிகவணங்கி யான்செய்யும் சிறுவிண் ணப்பம்:
எக்காலும் நம்பகையாம் காபு லெத்தின்
எழில்மகளை இல்லாளாய் இசைந்தே கொண்டேன்.
அக்கார ணத்தாலிவ் வடியேன் தன்மேல்
அன்புகொளீர் என்பதைநன் கறிவேனேனும்
முக்காலும் பிழைபொறுக்க வேண்டி நின்றேன்.
மூடனேன் காதலினாற் கட்டுண் டேனே!

363 "முன்னாள்டை பால்த்தனைநான் கொன்ற தற்கா
முடிபுனைந்த மன்னனுரைக் கிணங்கி யேயான்
இந்நாட்டை விட்டகன்றேன். சின்னாள் முன்னம்
என்மனைவி இறந்தாளென் றிசைப்பக் கேட்டேன்.

அங்காட்டி விருந்துவிஷம் வாங்கிக்கொண்டே
அன்புள்ள என்மனைவி பக்கல் எய்தி
என்ஆவி முடிக்கின்றேன் பிரிவாற் றாதே.
இங்ஙனம்நின் மகனுக்கும் ரோமி யோவே.”

364 என்றங்கே அவனெழுத லுற்ற செய்தி
யாவையும்ஓர்ந்தனன். பின்னர்த் தளர்ந்தே தன்கண்
நின்றங்கு நீர்வார நிகழ்ந்தான் யாதும்.
நின்றநிலை தனிற்சிறிதும் நீங்கா னானன்.
பொன்தங்கு முடிமன்னன் முதலா உள்ளார்
பொருந்தியவன் கையுள்ள கடிதம் நோக்கி
அன்றங்கு பட்டதுயர் அறைவார் யாரே?
அந்தோ! அத் துயர்பெரிது பெரிதே அன்றோ.

365 ஆனாலும் அக்கடிதம் தன்னை நோக்க
ஆவியகல் காதலற்கும் காதலிக்கும்
மேனாளில் மணம்பூணு வித்தோ னான
மேதக்க சாதுகுணம் விளங்கிற் றன்றே!
வானாதி பூதமெலாம் படைத்(து) அமைத்த
மாசில்லா மணியென்னச் சொல்ல லாகும்
ஆனாத கடவுள்சங் கற்ப மொன்றும்
அகல்நிலத் தோர் கருத்தொன்றும் ஆகு மன்றே?

366 ஈதுநிகழ்ந் ததன்பின்னர் இருந்தோர் யாரும்
'இத்துறவி மீதுபிழை சிறிதும் இல்லை.
ஏதமெலாம் விதிச்செயலால் நிகழ்ந்த(து)” என்றார்.
இதன்பின்னர் லாரென்ஸை ஏகச் செய்து,
சாதவிழ்பூந் தார்மன்னன் சாற்ற லுற்றான்
சம்பந்தி யாமிருவர் தம்மை நோக்கி:
“தீதுறையும் பாவிகளே! நுமது நீங்காச்
செற்றத்தா லன்றோஇக் கேடுற் றீர்கள்?”

367 என்றுரைத்து “நெடுங்காலம் வலிமை மிக்க
இருவீரும் பகுத்தறிவு சிறிது மின்றித்
துன்றுவனம் தனிற்றனியே உலவு கின்ற
துட்டவிலங் கெனப்பகைநீர் நும்முட் கொண்டீர்.

நன்றிபுரி கின்றமனம் நொந்து லோக
நாயகனே நுமது செயல் வெறுத்தான் என்ப(து)
இன்றறிந்தீர். இஃதறிந்த நீவிர் சென்ற
தெண்ணியிரங் கிற்பயனென் ? இயம்பக் கேண்மின்:

368 ‘‘பகையென்னும் பண்பில்லா ஒன்றை’ ஐயீர் !
பாருலகோர் மிகவிருப்ப மாகக் கொள்ளும்
‘நகையென்னும் கண்ணேயும் வேண்டற் பாற்றன்’
றென்றஒரு நல்லோன்றன் நயன்சேர் வாக்கின்
தகையுணரா திருந்தீரோ ! அந்தோ ! நும்பால்
சார்ந்தகதி தனை அறிந்தும் தீராத் துன்பம்
மிகையேசெய் இப்பகையை நீக்கி நீவிர்
மெய்யன்புற் றவராக மேவு வீரோ ?

369 “பெரும்பேற்றில் எவையேனும் உண்டோ சொல்வீர்
பெறலரிய மகப்பேறே அல்லால் வேறே?
அரும்பேறென் றுரைத்திடுதற் காம்அச் செல்வம்
அடைந்துமதை நீத்தீர்கள் அன்றோ? அந்தோ!
மருந்தேற்றும் தணியாத பிணியே போல,
வளர்ந்தபகை தனைமுற்றும் மாய்த்து நீவிர்
திருந்தேற்ற முளநேசம் மேவி வாழின்
திகழ்ந்திடுவீர் இருவீரும் சிறக்க மாதோ.”

370 என்றுரைத்த அரசனுரை கேட்ட அன்னோர்
இனிப்பகையே சிறிதும்தாம் எய்த லின்றி
அன்றுமுதல் நண்பினரா அமர்வ தாக
அவனுளம் மகிழும்வணம் அறைந்தா ரன்றே.
இன்றவருக் கெடுத்துரைத்த அரசன் தானும்
இதன்பின்தன் அரமனைசென் றெய்த லுற்றான்.
கன்றுமுள நீங்கிய அன்னோர்கள், யாரும்
காண,அவண் செய்தவெலாம் கழற லுற்றாம்.

## வேறு

371 "அய்யா! என்றன் மைத்துன!நம் அன்பார் மக்கள் இருவோரும்
மெய்யார் மணமே கொண்டதனால் மேனாள் உற்ற நமதுபகை
நையா ஒழிந்த தன்றியுநன் னட்புமுற்றோம்" என்றுரைத்துப்
பொய்யாநெஞ்ச முடையோனைப் புகன்றான் பின்னும் காபுலத்தே

372 "நின்னார் மகனைக் கணவனென நேர்ந்த என்றன் தனையைக்கு
மின்னார் பொற்பூண் நீபூட்ட வேண்டும். அதற்கு மாறாக
'இந்நாள் முதல்யாம் இருவோரும் இருப்போம் நேச
உளத்தினராய்'
என்னாக் கரத்தி லடித்திடுதி." எனலும் மாண்டே கிவை
உரைப்பான்.

373 "அய்யா! இதுபோ தாதையா! அணிமிக் கார்ந்த இந்நகரம்
மெய்யா யுள்ளமட்டுமிவண் விளங்கும் வண்ணம் ஓர்சிலைநின்
மையார் கண்ணி நன்வடிவம் வாய்ந்த தாக மாற்றுயர்ந்த
செய்யார் பைம்பொன் னதனால் யான் செய்விக் கின்றேன்"
[எனச்செப்ப,

374 "அவ்வாறாயின் அடியேனும் அறைவன்கேளாய்:என்மகளுக்(கு)
எவ்வாறியற்ற நினைத்துள்ளாய் அதுபோல் யானும் எழிலார்நின்
தவ்வாக்காதல் மிகுமைந்தன் தன்னைப்போலோர் சிலைசெய்தே
அவ்வாடலைவயின் அருகேயான் அமைப்பேன்" என்றான்
[காபுலத்தும்.

375 விரும்பிச் சேர்ந்த இருவோரும் வீந்தோர்க் குற்ற கடனாற்றித்
திரும்பித்தமதுவீடடைந்தார்.செய்தார் தாம்செப் பியவேபோல்
அரும்பொற் பதுமை அவர்வடிவின் ஆக்கி யாரும் அதிசயிக்கப்
பெரும்புற் றரைக்கண் நிறுவித்தார் பிரியா நேச ரெனக்காட்ட.

## வேறு

376 இனைய யாவுநன் குணர்ந்துள யாவரும் என்றும்
எனையதாயினும் தம்முளத் தினில்இகல் இன்றி
மனையு மக்களும் மகிழ்ந்திடும் வண்ணமே வாழ்க.
அனைய பான்மையே எய்துமா றருளுக ஈசன்.

### ரோமியோ ஜூலியத்
### முற்றிற்று.

## இப்புத்தகம் விலைக்குக் கிடைக்கும் இடங்கள்.

1. ஸ்ரீமந் A. R. ஸ்ரீநிவாச முதலியா ரவர்கள்,
ஆனைமலை, (கோயமுத்தூர் ஜில்லா).

2. பண்டித ம. கோபாலகிருஷ்ணையா ரவர்கள்,
தமிழ் லெக்சரர், நாஷனல் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

3. இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனாரவர்கள்,
புஸ்தக வியாபாரி, புதுமண்டபம், மதுரை.

4. மெஸர்ஸ் G. A. வைத்தியராமன் அண்ட் கோ,
3 & 4, கொண்டிச் செட்டி தெரு
ஜார்ஜ் டவுன், சென்னை.

5. மெஸர்ஸ் R. வேங்கடேசுவர் அண்ட்கோ,
புத்தக வியாபாரிகள், அந்திக்கடைப்பொட்டல்,
மதுரை.